REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மே 4 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 104 | Thursday 04, May, 2023 | 16 பக்கங்கள் | 50/-




நாடு இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை எனினும்

## இலங்கையின் பொருளாதார மீட்சியில் மிக நம்பிக்கையான ஒளிக்கீற்றுகள்

சனல் நியூஸ் ஏசியாவுக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் அலி சப்ரி



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அனைவருக்கும் சமமானவையாக காணப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதுவரை நம்பிக்கையளிக்க கூடிய சமிக்ஞைகள் தென்படுகின்றன. ஆனால், இலங்கை இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். 06

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

## A/L விடைத்தாள் திருத்தம் செய்யாததால் சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கே அநீதி

வசதி படைத்தவர்களுக்கு அல்ல என்கிறார் அமைச்சர் பந்துல



லோரன்ஸ் செல்வநாயகம்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாதமை, வசதி படைத்தவர்களின் 06

## வர்த்தகத்துக்குச் சாதகமான சூழலை உருவாக்க 07 ஜனாதிபதி செயலணிகள்

54 நிறுவனங்களை நிறுவுகிறது ஜனாதிபதி அலுவலகம்

நாட்டில் "வர்த்தக நட்புச்சூழலை" உருவாக்கும் நோக்குடன், ஏழு செயலணிகளின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வசதியான சேவைகளை வழங்கும் 54 நிறுவனங்களை நிறுவ ஜனாதிபதி அலுவலகம் திட்டமிட்டுள்ளது.

முதலீடுகளின் செயல்திறனை அதிகரிக்கவும், 06



இலங்கை வந்துள்ள இந்திய விமானப்படை தளபதி எயார் ஷீப் மார்ஷல் விவேக் ராம் சௌத்திரி நேற்று (03) அலரி மாளிகையில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவை சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

A/L கற்க தகுதி பெறும் மாணவர்கள் மாவட்ட ரீதியாக தெரிவு

# 3,000 மாணவருக்கு இரண்டு வருடங்களுக்கு மாதம் ரூ.5,000



ரூ. 360 மில்லியன் செலவாகும் எனவும் மதிப்பீடு

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்று உயர்தரத்துக்கு தெரிவாகும் மாணவ, மாணவியருக்கு இரண்டு வருட காலத்துக்கு 5,000 ரூபா வீதம் புலமைப்பரிசில் வழங்கும் 'ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கல் 2023' திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (03) ஜனாதிபதி அலுவலகத்தில் இத்திட்டத்தை அடையாளரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றி முதல் அமர்விலேயே சித்திபெற்று க.பொ.த உயர்தரத்துக்கு தெரிவான மாணவ, மாணவியருக்கான புலமைப்பரிசில் வழங்குவதற்கான மேற்படி திட்டத்தை ஜனாதிபதி நிதியம் மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து 06

A/L கற்க முதல் அமர்விலேயே சித்திபெறும் மாணவர்களை 100 கல்வி வலையங்களிலிருந்து தலா 30 மாணவர் வீதம் தெரிவு செய்து புலமைப்பரிசில் வழங்க திட்டம்

ஜனாதிபதி இல்லத்துக்கு தீவைப்பு சம்பவம்

## ஐம்பது இலட்சம் ரூபா சரீர பிணையில் ரங்கா விடுதலை



(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக பெயரிடப்பட்டு விளக்கமறியலில் 06



அரசியல் வேறுபாடின்றி நன்மைகள் மக்களை சென்றடைய வேண்டும் 03

தமிழ் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

## விலைச் சூத்திரத்துக்கு அமைய லிற்றோ Gas விலை குறைப்பு

12.5 சிலிண்டரின் புதிய விலை ரூ 3,638



(லோரன்ஸ் செல்வநாயகம்)

லிற்றோ சமையல் எரிவாயு விலைகள் விலைச் சூத்திரத்துக்கமைய நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக, லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் 06

## மாகாண சபை தேர்தலையே முதலில் நடத்த வேண்டும்

அரசிடம் வலியுறுத்துகிறது எதிர்க்கட்சி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



முதலில் உள்ளூராட்சித் தேர்தலன்றி மாகாண சபைத் தேர்தலையே நடத்த வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் ஒன்றிணைந்த ஊடக சந்திப்பு 06

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு அரசாங்கம் அடைக்கலம்

மாகாண மட்டத்தில் பராமரிப்பு நிலையங்கள்

பெற்றோரால் பராமரிக்க முடியாத மூன்று மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் பராமரிப்பு நிலையங்களை நிறுவி, அதனூடாக குழந்தைகளை பராமரிக்கும் யோசனை இத்திட்டத்திலுள்ளது.

இதற்கான சட்டங்கள் விரைவில் உருவாக்கப்படுமென நன்னடத்தை 06

கொவிட் 19 தொற்று தீவிரம்

## சுகாதார வழிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தல்

வெசாக் காலத்தில் கடும் எச்சரிக்கை விடுப்பு



தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் கொவிட் 19 நோய்த்தொற்றுகள் அதிகரித்துள்ளதையடுத்து, இலங்கையிலுள்ள சுகாதார அமைச்சு பொது மக்களை சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்குமாறு 06

## இந்திய நிதி அமைச்சர் சீதாராமனை வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

இருநாட்டு உறவுகள் குறித்து கலந்துரையாடல்

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

தென் கொரியத் தலைநகர் சியோலில் நேற்று (03) இந்த சந்திப்பு இடம்பெற்றதாக அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டரில் 06



A/L பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு

## விண்ணப்ப கால அவகாசம் நீடிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக, தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து இணையவழி (ஒன்லைன்) விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

கடந்த எப்ரல் (27) முதல் நேற்று 06



தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிர்ப்பு

ஐ.ம.சக்தியின் மனு மீதான பரிசீலனை ஜூன் 09 இல் 06

## லொறியுடன் மோதிய எம்.பியின் டிபெண்டர்


06 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்

பாராளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத் பயணித்த டிபெண்டர் ரக வாகனம் சிறிய லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 06 பேர் காயமடைந்தனர்.

வாரியபொல நகரில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பு, நேற்று 06

## பிரபல நடிகர், இயக்குநர் மனோபாலா காலமானார்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)



தமிழ் சினிமா இயக்குநரும், நடிகருமான மனோபாலா சென்னையில் தனது 69 ஆவது வயதில் நேற்று புதன்கிழமை காலமானார். 1979 ஆம் ஆண்டு பாரதிராஜா 06



# நகர்வலம்



## முட்டையின் எடைக்கு ஏற்ப விலை

# வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யத் தீர்மானம்

### நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எடையை நிர்ணயம் செய்து முட்டையை விற்பனை செய்வது தொடர்பில் உச்ச சில்லறை விலை நிர்ணயம் செய்து கடந்த சில தினங்களுக்கு முன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியை ரத்து செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

ஏற்கனவே நுகர்வோர் விவகார அதிகார சபை உச்ச சில்லறை விலையை நிர்ணயித்து வர்த்தமானியொன்றை வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க வெள்ளை முட்டை ஒன்றின் விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டையொன்றின் விலை 46 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த வகையில் முட்டையின் எடையை வைத்து விற்பனை செய்யப்படும் போது ஒரு முட்டையின் விலை 50 ரூபாவுக்கு மேல் விலை அதிகரித்துக் காணப்படுவதை கவனத்திற் கொண்டு புதிதாக வெளியிடப்பட்ட வர்த்தமானியை ரத்து செய்வதற்கு கவனம் செலுத்தியுள்ளதாக அந்த அதிகாரசபையின்




உயரதிகாரியொருவர் தெரிவித்தார். புதிய வர்த்தமானிக்கிணங்க வெள்ளை முட்டை ஒரு கிலோ 880 ரூபா உச்ச சில்லறை விலைக்கும் சிவப்பு முட்டை கிலோ 920 ரூபா உச்ச சில்லறை விலைக்கும் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு முட்டை விற்பனை செய்யப்படும் போது, முட்டையொன்றின் விலை 50 ரூபாவுக்கு அதிகமாக காணப்படுவதாலும், அதனை வைத்து முட்டை வர்த்தகர்கள் அதிக இலாபத்தை பெற்றுக் கொள்வதாலும் ஏற்பனவே வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு முரணாக அது காணப்படுவதாலும் புதிய வர்த்தமானியை ரத்து செய்வதற்கு கவனம் செலுத்தியுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## இலங்கை வந்துள்ள இந்திய தளபதி முக்கியஸ்தர் பலருடனும் சந்திப்பு





இந்திய விமானப்படை தளபதி எயார் ஷீப் மார்ஷல் விவேக் ராம் சௌத்திரி (01) இலங்கை வந்துள்ளார்.

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் அழைப்பின்பேரில் இங்கு வந்த அவர், நேற்று முன்தினம் (02) விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பு விமானப்படை தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது, இந்திய விமானப்படை தளபதி, இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.கூட்டு பயிற்சிகள் மற்றும் கடல்சார் பாதுகாப்புகள் தொடர்பாக இவர்கள் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பை நினைவுகூரும் வகையில், நினைவுசின்னங்களும் பரிமாறப்பட்டன.


பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித் பண்டார தென்னகோனையும் இந்திய விமானப்படை தளபதி சந்தித்தார்.

## தேசிய நோன்புப் பெருநாள் நிகழ்வு இன்று குருநாகலில்

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள தேசிய மட்ட நோன்புப் பெருநாள் நிகழ்ச்சி இன்று (04) குருநாகல் சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் அழகியற் கல்வி மற்றும் மத கல்விப் பணிப்பாளர் கலாநிதி நிசாத ஹந்த பான்கொட பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு கௌரவ அதிதிகளாக முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் மேஜர் என்.ரீ. நசுமுத்தீன் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெயமஹ, கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆர்.எம். இர்சான், உதவிப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.நவ்பர்டீன், கிரியுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.எம்.பாயிஸ் ஆகியோர் பங்கேற்கின்றனர். (பா)

## தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சல் தீவிரம்; 229 பேர் பாதிப்பு; 19 பேர் உயிரிழப்பு



### காலி மாவட்ட சமூக வைத்திய நிபுணர் தெரிவிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாணத்தில் தீவிரமாக எலிக்காய்ச்சல் தொற்று பரவி வருகின்றது. குறிப்பாக காலி மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் 229 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

இவர்களுள் 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் காலி மாவட்ட சமூக வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்தார்.

அசுத்தமான நீர், ஈரமான மண் அல்லது சேற்றில் தொழில் செய்பவர்களுக்கே இந்த நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்திலும் இந்நோய் பரவும் அபாயம் உள்ளது.

விவசாயிகளுக்கு மாத்திரமின்றி கட்டுமானப் பணிகளில் ஈடுபடுபவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கறுவா, தேயிலை பயிர்ச் செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்றோரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான காய்ச்சல், உடல் வலி, தசை வலி, கண் சிவத்தல் போன்றன இந் நோயின் அடையாளங்களாகும். இருப்பினும் ஏனைய அறிகுறிகள் இன்றி காய்ச்சல் மட்டும் இருந்தாலும் எலிக்காய்ச்சல் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. இந்நோயினால் பாதுகாப்பு பெற மருத்துவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் மருந்துகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## வைத்தியசாலையில் இளைஞன் கொலை

# சம்பவத்துடன் தொடர்புடைய பெண் உட்பட இருவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பேராசிரியர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவரின் கொலையுடன் தொடர்புடைய பெண்ணொருவர் உட்பட இருவரை (02) கைது செய்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரும் அவரின் மனைவியான 23 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மதவாச்சி பகுதியில் இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது காயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பேராசிரியர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த (28) காலை 4.30 மணியளவில் வைத்தியசாலை அறைக்குள் புகுந்த நபர் கூரிய ஆயுதத்தினால் வெட்டி கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



வரக்காபொல, நாங்கல்ல பிரதேசத்தில் இயங்கும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் சங்கம் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த ரமழான் செயலமர்வின் கேள்வி பதில் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு பரிசில் வழங்கும் வைபவம் நாங்கல்ல முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.ஏ.எம் இக்ராமுல்லா மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மாணவிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் போட்டிப்பரீட்சை





இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக புனித ரமழான் மாதத்தில் நடாத்தப்பட்ட விசேட வழிகாட்டல் போட்டிப்பரீட்சை மற்றும் வினா விடைப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் தர்காநகர் 'ஏஸியம்' கல்வியகத்தில் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் மொஹமட் றிப்கான் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த வைத்திய கலாநிதி எம்.கே.எம். றியாஸ் "சமகால மாணவர்களும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும்" தொடர்பில் மாணவர்களுடனான விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார். சிறப்பு அதிதிகளாக அஷ்ஷெய்ஹ் றிழா (நளீமி), மத்துகம தேவகொட ஆரம்பப் பாடசாலை அதிபர் ஸீ.எம்.ரீ. ஸந்தஹஸ், வெலிப்பென்ன ரஹ்மானியா தேசிய பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியை எம்.என். நுபைலா, சமூக சேவையாளர் எம்.எஸ்.எம். றிப்கான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விசேட போட்டிப் பரீட்சையில் 189 புள்ளிகள் பெற்ற தர்காநகர் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஆர்.ஏ.எப். ரஹ்மா மற்றும் வினா விடைப்போட்டியில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி எம்.எப்.எப். றிக்ஸா ஆகியோர் பிரதம அதிதியால் கிண்ணங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தர்கா நகர், பேருவளை மற்றும் மத்துகம பிரதேச பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியிருந்த இப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மற்றும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பணப்பரிசுகளும் ஆறுதல் பரிசுகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

# பாதுகாப்பற்ற கழிவறைக் குழியில் விழுந்த யானை 9 மணி நேரத்தின் பின் மீட்பு

## எப்பாவல பொலிஸ் பிரிவில் சம்பவம்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எப்பாவல பொலிஸ் பகுதியில் மாவத்தவெவ பிரதேசத்தினுள் வீடொன்றில் கழிவறைக் குழியில் விழுந்திருந்த காட்டு யானையொன்றை வனவிலங்கு உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் பிரதேச மக்களும் இணைந்து (01) மீட்டெடுத்து வனப்பகுதியில் விடுவித்துள்ளனர்.

எப்பாவல மாவத்தவெவ கிராமத்திற்குள் (01) ஆம் திகதி இரவு நுழைந்த 25 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்று மாவத்தவெவ வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றின் கழிவறையில் விழுந்துள்ளது.

பின்னர் அது தொடர்பில் எப்பாவல பொலிஸ் நிலையத்திற்கும் தலாவ வனவிலங்கு அலுவலகத்திற்கும் வீட்டுரிமையாளர் தெரிவித்ததுடன் அவர்கள் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து 9 மணித்தியாலமாக பல்வேறு முயற்சியுடன் பெகோ இயந்திரத்தின் உதவியுடன் மீட்டெடுத்து மாவத்தவெவ வனத்தில் விடுவித்துள்ளதாக வனவிலங்கு அலுவலகம் தெரிவித்தது.




பி 2 லியோ மாவட்ட கழகம் ஏற்பாடு செய்த நடனம் மற்றும் பாடல் போட்டியின் இறுதி நிகழ்ச்சி பத்தரமுல்ல, அபேகம கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. நடனத்தில் லியோ பத்தகச்சாயனா ராஜபக்ஷ முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார். அவருக்கான விருதினை பி 2 மாவட்டக் கழகத் தலைவர் ராகேஷ் யோகேஷ்வரன் வழங்கி வைப்பதையும் பத்தகச்சாயனா ராஜபக்ஷவின் தாயார் உள்ளிட்ட பலர் அருகில் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## நேகம அல் ஹிக்மாவில் வருடாந்த கலை விழா

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா இந்த வருடமும் சிறப்பாக நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தன. சிறார்கள், பெரியவர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்ததுடன், நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம் அதிபர் உட்பட பிரதி அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி பரிபாலன சபை நிர்வாகிகள் கிராம சேவையாளர், அல் ஹிக்மா பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# நாச்சியாதீவு விவசாய பிரதேசத்தில் இம்முறை சிறுபோக வேளாண்மை

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின் நாச்சியாதீவு விவசாய பிரதேசத்தில் இம்முறை "2023 சிறுபோக" வேளாண்மை செய்கைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வயல் நிலங்களை உழுது பன்படுத்தும் வேலைகளில் இப்பிரதேச விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கம் விவசாயிகளின் நன்மை கருதி உழவு இயந்திரங்களுக்கான எரி பொருள் மற்றும் சேற்றுப் பசளைகளை இலவசமாக வழங்கியுள்ளமையும், எரி பொருளின் விலைகள் குறைவடைந்துள்ளமையும் , உழவு வேலைகளுக்கான உழவு இயந்திரக் கூலியும் குறைவடைந்துள்ளதாலும் இம்முறை விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் சிறுபோக வேளாண்மை செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

நாச்சியாதீவு குளத்தின் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுவதும் இரண்டு அலைகளிலும் நீர் திறந்து விடப்படுவதும் சிறுபோக நெற்செய்கைக்கு சாதகமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 4 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்

சுபஹ் - 04.37
லுஹர் - 12.09
அஸர் - 03.27
மஃரிப் - 06.19
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் சித்திரை 21

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**தினேஷ் சாப்டர் படுகொலை சம்பவம்**

# தாதி உட்பட 10 பேரின் டீ.என்.ஏ. அறிக்கையை கோரும் நீதிமன்றம்

## இரசாயன பகுப்பாய்வாளருக்கு நீதவான் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளர் தினேஷ் சாப்டரின் படுகொலை தொடர்பில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதுடன், அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த தாதியர்கள் உள்ளிட்ட பத்து பேரின் டீ.என்.ஏ. அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேலதிக மஜிஸ்ரேட் நீதிவான் டீ.என். எல். இலங்கசிங்க அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தினேஷ் சாப்டரின் மரணத்துடன் தொடர்புடைய இரசாயன பகுப்பாய்வு அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ள வழக்குப் பொருட்களில், மரணித்தவருக்கு மேலதிகமாக இருவரது டீ.என்.ஏ. அறிக்கை உள்ளடக்கப்பட்டிருந்ததாக இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அது யாருடையது என்பதை அறிந்து கொள்ளும் வகையில் மேற்படி 10 பேரினதும் டீ.என்.ஏ. அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டுமென குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் மனுவொன்றின் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது.

அதனைக் கவனத்திற் கொண்டு மாஜிஸ்ரேட் நீதவான் நேற்று மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# தேசிய செயற்திறன் ஆணைக்குழுவின் பணிகளுக்கு அவுஸ்திரேலியா உதவி

அவுஸ்திரேலிய தேசிய செயற்திறன் ஆணைக்குழு மற்றும் இலங்கை தேசிய செயற்திறன் ஆணைக்குழு ஆகியவற்றின் செயற்பாட்டாளர்களுக்கிடையிலான அனுபவங்களை, பகிர்ந்து கொள்ளும் இணையவழி அமர்வு அண்மையில் நடைபெற்றது. ஜனாதிபதி அலுவலகம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த இலங்கை பரந்த அளவிலான திட்டமிடல்களை அமுல்படுத்தியுள்ளது. இந்நிலையில், இதன் முதன்மைத் திட்டமாக தேசிய செயற்திறன் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே நாட்டின் நெருக்கடியை பொருட்படுத்தாமல் 2023 வரவு செலவு திட்டத்தில் ஆணைக்குழுவை நிறுவுவதற்காக அரசாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைச்சுக்கள் உள்ளடங்கிய செயற்பாட்டு குழு ஒன்றின் ஊடாக இதன் செயற்பாடுகள் வழிநடத்தப்படும்.

செயற்திறன் செயற்பாடுகள் தொடர்பிலான சர்வதேச முறைமைகளை ஆராய்வதே ஆணைக்குழுவின் நோக்கமாகும். இதற்காக சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற அவுஸ்திரேலிய செயற்திறன் ஆணைக்குழுவின் உதவியை அரசாங்கம் கோரியுள்ளது. அதற்கான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் உறுதியளித்திருந்தது.



இலங்கை வந்துள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் வி. ஆர்.சௌதாரி, நேற்று (03) பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்தார். இச்சந்திப்பு கோட்டே, ஸ்ரீ ஜயவர்தன புரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

# அரசியல் வேறுபாடின்றி நன்மைகள் மக்களை சென்றடைய வேண்டும்

## தமிழ் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு



மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் வேறுபாடு கிடையாதென தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமெனவும் அதற்கான ஆலோசனைகள் முன்மொழிவுகளை மக்கள் பிரதிநிதிகள் வழங்க முடியுமெனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று (03) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே, ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில்சார் முன்னேற்றங்களுக்காக 1,650 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது. அதேபோன்று வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களின் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக சீனா 1,500 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இந்தியாவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்க உள்ளது.

எமது மக்களுக்கு கிடைக்கும் இவ்வாறான வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு கிடையாது.

இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் அச்சுறுத்தலாக காணப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக ஆராயப்பட்டது. குறித்த விடயம் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்றை நடத்தி விரிவாக ஆராய்ந்து உறுதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று மாவட்டத்திலுள்ள காணிப் பிரச்சினைகள், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் தொடர்பான விவகாரம், நீர்ப்பாசனம் சார்பான ஒழுங்குபடுத்தல்கள், கிளிநொச்சி நகர அபிவிருத்தி திட்டம் போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். கஜேந்திரன், எஸ். ஸ்ரீதரன், எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், அரசாங்க திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

**பொது அறிவித்தல்**

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 241 பிரிவு இற்கு அமைவாக ஒன்றிணைத்தல்**

**API டெக்னாலஜி (பிரைவெட்) லிமிடெட் (நிறுவன எண். PV. 6589) மற்றும்**
**A P I டிரேட்ஸ் (பிரைவட்) லிமிடெட் (நிறுவன எண். PV 6215)**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் (சட்டம்) 244 (3) பிரிவின் அடிப்படையில் AP I டெக்னாலஜி (பிரைவேட்) லிமிடெட் (நிறுவன எண். PV 6589) மற்றும் API டிரேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (நிறுவன எண். PV. 6215) கம்பெனிகள் ஒன்றிணைக்கப்பட்டு சட்டத்தின் 241 பிரிவின் அடிப்படையில் ஒரே நிறுவனமான API டிரேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (நிறுவன எண். PV. 6215) எனும் பெயரில் கீழ் தொடர்ந்து இயங்கும் என இதன் மூலம் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. மேலும் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்ப ஒருங்கிணைப்பு செயல்முறைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட திகதி: 20 ஏப்ரல் 2023

**API டிரேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்** இன் இயக்குநர்கள் சபைகளின் உத்தரவின் பேரில்

**C.G. கோர்பரேட் கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**
செயலாளர்

**45, விசாகா வீதி,**
**கொழும்பு 04. இலங்கை.**
02. மே 2023

**வாகனங்கள் விற்பனைக்கு**

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -6XXX | NISSAN | CEFIRO | 1996 |
| GG -9XXX | TOYOTA | STARLET | 1998 |
| KM -2XXX | TOYOTA | DBA-KSP92 BELTA | 2008 |
| **ஜீப்** | | | |
| JW -3XXX | TATA | 207 DI | 2005 |
| DAE -2XXX | TATA | XENON LIGHT TRUCK | 2016 |
| **லொறி** | | | |
| GH -7XXX | ISUZU | FORWARD | 1993 |
| PR -2XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PX -8XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2014 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HI -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QI -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QK -9XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QV -3XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| AAA -2XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAS -5XXX | BAJAJ | RE | 2014 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 மே 4ஆம், 8ஆம், 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 மே 10ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

லங்கா சதொச
LANKA SATHOSA லங்கா சதொச

**பெறுகை அறிவித்தல்**

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

**லங்கா சதொச லிமிடட்டுக்கு பாரமான வேலைகள் மற்றும் சாதாரண தொழிலாளர் சேவையை வழங்கல்**

விலைமனு இலக்கம்: LSL/PRO/05/25/Heavy Duty & Casual Labours/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

**லங்கா சதொச லிமிடட்டின் விநியோக களஞ்சியங்களுக்கு ஓர் ஆண்டு காலத்திற்கு பாரமான வேலைகள் மற்றும் சாதாரண தொழிலாளர் சேவையை வழங்குவதற்காக,** லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழு தலைவரினால் தொழிலாளர் சேவையை வழங்க முடியுமான வழங்குனர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவைகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆவணத்தை **ரூபா 5,000.00 தொகையை (மீளளிக்கப்படாதது) செலுத்தி 2023 மே மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 2023 மே மாதம் 25 ஆம் திகதி வரையான காலத்தில்** கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம்,**
**பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 மே மாதம் 15 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கும் விலைமனுக்கள், **2023 மே மாதம் 25 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்குள் இட வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/25/Heavy Duty & Casual Labours/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களினாலும் வாங்கப்படுகின்ற விலைமனு ஆவணத்துடன் உள்ள **"விலைமனு பிணை பிரகடனத்திற்கான வடிவத்தை"** தெளிவாக பூர்த்தி செய்து விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். "

விலைமனுக்களை ஏற்பது **2023 மே மாதம் 25 ஆம் திகதி பி.ப. 01.00க்கு முடிவுறுவதோடு** விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழைக்கவும்,
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (திலினி) – 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

**கேள்வி அறிவித்தல்**

**சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு மாவட்டம்**

**அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் – 2023**

எமது கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகப் பிரிவிற்குரித்தான பின்வரும் நிறுவனங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | நிறுவனத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1 | அவிசாவளை தள வைத்தியசாலை | 1000.00 |
| 2 | மாளிகாவத்தை வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 3 | தலங்கம வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 4 | நவகமுவ வைத்தியசாலை (பெரியவை மற்றும் சிறியவை) | 500.00 |
| 5 | கொஸ்கம வைத்தியசாலை | 500.00 |
| 6 | பாதுக்க வைத்தியசாலை | 500.00 |
| 7 | அத்துருகிரிய வைத்தியசாலை | 500.00 |
| 8 | பாலியல்சார் நோய்கள் ஒழிப்புப் பிரிவு | 500.00 |

கேள்வி ஆவணங்களை 2023-05-03ஆம் திகதி முதல் 2023-05-24ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இயைபுடைய லொட் இலக்கத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை கொழும்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 0112326248 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து இந்த அலுவலகத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - லொட் இல. (…….) வழங்கலுக்கான விலைகள் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2023-05-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அவைகள் 2023-05-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10**

**அறிவித்தல்**

**நீதி அமைச்சு**

**2023ஆம் ஆண்டிற்காக வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் முகமாக வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

நீதி அமைச்சின் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்வதற்காக ஒப்பந்தங்களை வழங்கும் முகமாக நிதி அமைச்சில் பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்குநர்களிடமிருந்து (கொழும்பு மாவட்டம் மற்றும் புறநகர் பிரதேசங்களிலிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.moj.gov.lk என்ற இணையதளத்தில் அல்லது, நீதி அமைச்சின் வழங்கல்கள் பிரிவின் மூலம் பெற்றுக் கொண்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் இவ் அமைச்சிற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு காசாக ரூ. 1000.00 (மீளளிக்கப்படாத) செயலாளர், நீதிமன்ற அமைச்சின் பெயரில் அரச வருமான தலைப்பு 2003-99-00 இற்கு வரவு வைக்குமாறு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும். (இதற்காக காசோலைகள் ஏற்கப்படமாட்டாது என அறிவிக்கிறேன்)

விண்ணப்பங்களை கீழே பெயர் குறிப்பிடப்படும் நபருக்கு 2023.05.26 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில் இவ் அமைச்சின் முதலாம் மாடியில் வழங்கல்கள் பிரிவில் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி 'தலைவர், பெறுகைக் குழு, நீதி அமைச்சு, இல. -19, சங்கராஜ மாவத்த, கொழும்பு-10' ஆகும் குறித்த தினத்திற்கு மற்றும் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் '2023ம் ஆண்டிற்காக வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**நீதி அமைச்சு,**
**இல. 19, சங்கராஜ மாவத்த,**
**கொழும்பு-10**

**மதிப்பீட்டு தகவுத்திறன்**

1. வாகனங்களை பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் பற்றிய குறைந்த பட்சம் 05 அரச நிறுவனங்களிலாவது பதிவு செய்திருத்தல் மற்றும் அதனை உறுதி செய்யும் கடிதங்களை சமர்ப்பித்தல்
2. கராஜ்களை காப்புறுதி செய்திருப்பின் மற்றும் அதனை உறுதி செய்யும் கடிதங்களை சமர்ப்பித்து இருத்தல்
3. பயிற்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் சம்பந்தமான தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் பரீட்சித்தல்
4. வருமான வரி செலுத்துதல் பற்றிய விபரங்களைப் பரீட்சித்தல்
5. துறைசார் பரிசீலனையின் மதிப்பீடு

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் சித்திரை மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 13

## குறள் தரும் சிந்தனை

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்

*உயர்ந்த கொள்கை உறுதி கொண்டவர்கள் சீறி எழுந்தால், அடக்குமுறை ஆட்சி நிலைகுலைந்து அழிந்துவிடும்.*

## டெங்கு தீவிரமடைவதால் மிகுந்த அவதானம் அவசியம்!

நாட்டின் பல பிரதேசங்களிலும் டெங்கு வைரஸ் நோய் மீண்டும் தலைதூக்குவதற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை தொற்றுநோய் பரவுதல் தடுப்புப் பிரிவின் தரவுகளும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அதேநேரம், 'கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக பெரிதும் அதிகரித்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் எஸ். அருள்குமாரன், 'கடந்த நான்கு மாதங்களிலும் இம்மாகாணத்தில் மாத்திரம் 4300 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாநகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி டொக்டர் ருவன் விஜேமுனி, 'பல வருடங்களுக்குப் பின்னர் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் டெங்கு நோயின் மூன்றாம் வகை பதிவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இன்றைய நாட்களில் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட்டால் தகுதி வாய்ந்த மருத்துவரின் ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்' எனக் கேட்டுள்ளார். இதேவேளை நாட்டின் ஏனைய மாவட்டங்கள் பலவற்றில் இந்நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், 'நாட்டின் பல பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை இந்நோய் தீவிரமடைவதற்கு துணைபுரியக் கூடியதாக உள்ளது' என்று தொற்று நோயியல் பிரிவு மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு டெங்கு வைரஸ் காய்ச்சல் நாட்டில் தீவிரமடைவதற்கான சாதக நிலைமைகள் காணப்படுகின்றன. ஆனால் நுளம்புகளால் காவிப் பரப்பப்படும் டெங்கு வைரஸின் பரவுதலைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியும். இந்நோய்க்கு உள்ளானால் உரிய காலத்தில் மருத்துவ ஆலோசனைகளுடன் கிசிச்சை பெற்றுக் கொள்ளும் போது அதனை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும். அதற்கான மருத்துவ வசதிகளும் உள்ளன.

இந்நோயின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். அத்தோடு இந்நோய் தொடர்பில் கவனம் செலுத்தி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பும் மக்களுடையதேயாகும்.

டெங்கு நோயானது நுளம்புகளால் காவிப் பரப்பப்படக் கூடியதொரு நோய். இந்நுளம்புகள் தெளிந்த மழைநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகக்கூடிய இயல்பைக் கொண்டுள்ளது.

அதனால் மழைநீர் தேங்கி நுளம்பு பெருக முடியாதபடி சுற்றாடலைச் சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருக்க வேண்டிய தேவை பரவலாகக் காணப்படுகின்றது. ஏனென்றால் மழைநீர் தேங்கக்கூடிய கைவிடப்பட்ட டயர்கள், சிரட்டைகள், பொலித்தீன் உறைகள், யோகட் கப்கள் உள்ளிட்ட பல பொருட்கள் சுற்றாடலில் பரவலாகக் காணப்படுகின்றன. அவ்வாறான திண்மக் கழிவுகள் மழைநீர் தேங்குவதற்கான வசதியைக் கொண்டிருக்கின்றன. அவற்றை டெங்கு நுளம்புகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அதன் விளைவாகப் பல்கிப் பெருகும் டெங்கு நுளம்புகள் இந்நோய் தீவிரமடைவதற்கு துணைபுரிகின்றன.

நுளம்புகள் பெருக முடியாதபடி சுற்றாடலில் காணப்படும் மழைநீர் தேங்கக்கூடிய திணமக்கழிவுப் பொருட்களை ஒழுங்குமுறையாக அகற்றி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருந்தால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்திற்கான வாய்ப்பு பெரிதும் குறைவடைந்து விடும்.

அத்தோடு தற்போதைய சூழலில் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சலுடன் கூடிய நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் காலதாமதமன்றி தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரியை அணுகி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் போது இந்நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம்.

காய்ச்சலுடன் கூடிய நோய் அறிகுறிகள் குறித்து மக்கள் மத்தியில் கவனயீனமும் அசமந்தப் போக்கும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதனை டெங்கு வைரஸ் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி தீவிர நிலையை அடைந்து விடுவதோடு உயிராபத்து மிக்க நிலைமையையும் ஏற்படுத்தி விடக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

காய்ச்சலுடன் கூடிய நோய் அறிகுறிகள் குறித்தும் சுற்றாடலில் காணப்படுகின்ற மழைநீர் தேங்கும் திண்மக்கழிவுப் பொருட்கள் குறித்தும் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது. அவை ஆரோக்கிய ரீதியில் கெடுதல்களை ஏற்படுத்த வழிவகுக்கும். இது தொடர்பில் மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்போது டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தி அந்நுளம்புகள் தோற்றுவிக்கும் வைரஸ் நோயையும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே டெங்கு நோயைத் தவிர்த்துக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு விழிப்புணர்வும் முன்னெடுச்சரிக்கையும் இன்றியமையாதவையாகும். அது தொடர்பில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டிய பொறுப்பும் மக்களுடையதே. இவ்விடயத்தில் கவனயீனமோ அசிரத்தையோ கூடாது. அதுவே மருத்துவ நிபுணர்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# நெருக்கடி தணிந்து சுமுகநிலைமை உருவானதால் இம்முறை சிறப்பான வெசாக் கொண்டாட்டம்

பொருளாதார நெருக்கடியில் சிறிது தணிவு ஏற்பட்டு, நாட்டில் தற்போது சகஜநிலைமை உருவாகியுள்ளதன் காரணமாக தமிழ்_சிங்களப் புத்தாண்டு நிகழ்ச்சிகளும், விளையாட்டுப் போட்டிகளும் ஏனைய கொண்டாட்டங்களும் சில வருட காலத்துக்குப் பின்னர் இம்முறை களைகட்டியிருந்தது ஒருபுறமிருக்க, வெசாக் கொண்டாட்டங்களும் இம்முறை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் வெசாக் அலங்கார தோரணங்கள், பந்தல்கள் இம்முறை சிறப்பாக அமைக்கப்பட்டு வருகின்றன. நிறுவனங்களிலும் இம்முறை சிறப்பாக வெசாக் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வருட வெசாக் பண்டிகை நாடளாவிய ரீதியில் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பாணந்துறையில் இம்முறை பாரிய வெசாக் பந்தல் அமைக்கப்படுகின்றது. இப்பந்தல் வெசாக் தினத்தன்று தொடக்கம் பன்னிரண்டாம் திகதி வரை மக்களுக்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

பாணந்துறையின் பாரிய வெசாக் பந்தல் அறுபத்தைந்து அடி உயரமும், ஐம்பத்தெட்டு அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. இது பாணந்துறை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் 65 ஆவது வருட வெசாக் பந்தல் ஆகும். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மூன்று வருடங்களாக வெசாக் பண்டிகை தொடர்பான பாரிய பொதுநிகழ்வுகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை அரசாங்க வெசாக் பண்டிகை புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொக்காவில, கெபெல்லாவல ஸ்ரீ ரத்னசிறி பிக்குமார் பயிற்சி நிலையத்தை மையமாகக் கொண்டு இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு கடந்த இரண்டாம் திகதி முதல் எட்டாம் திகதிவரை வெசாக் வாரம் அமுலாகின்றது.

பௌத்த சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு, பௌத்தமத விவகாரத் திணைக்களம், புத்தளம் மாவட்ட செயலகம் உட்பட ஏனைய அமைப்புகளும் ஒன்றிணைந்து அரச வெசாக் பண்டிகையை ஏற்பாடு செய்துள்ளன.

## பாணந்துறையில் பல வருடங்களுக்குப் பின்னர் பாரிய வெசாக் பந்தல்





எமது நாட்டில் பல வருடங்களாக நிலவிய கொரோனா தொற்று மற்றும் அதனையடுத்து உருவான பொருளாதார வீழ்ச்சி போன்ற பல்வேறு காரணிகளால் மக்களின் புத்தாண்டு நிகழ்வுகள் மற்றும் வெசாக் பண்டிகை என்பன கடந்த சில வருடங்களாக சோபிக்கவில்லை. வெசாக் பந்தல்கள், தோரணங்கள் மற்றும் தானம் வழங்கல் என்பனவும் மூன்று வருடங்களாக குறிப்பிடத்தக்களவு ஏற்பாடு செய்யப்படவில்லை.

தேவதர்ம ஜாதகக் கதையை மையமாக வைத்து பாணந்துறை நகர் பகுதியில் அமைக்கப்படும் பாரிய வெசாக் பந்தல் நவீன தொழில்நுட்ப ரீதியில் அமைக்கப்படுவதுடன், இதற்காக 258 பாக்கு மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்பதாயிரம் மின்குமிழ்களால் பந்தலுக்கு பல்வகை வர்ணஒளி கொடுக்கவுள்ளது. இம்மாதம் 12 ஆம் திகதி வரை பொதுமக்களுக்காக இந்த வெசாக் பந்தல் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# காரைதீவில் அரங்கேற்றப்பட்ட சர்வதேச நடன நாட்டிய சங்கமம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் 'திக்கெட்டும் சதிரே' என்ற நாட்டிய சங்கமம் கடந்த திங்கட்கிழமை மாலை காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது .

சர்வதேச நடன தினத்தையொட்டி காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். சீர்பெறு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி ஃப்ளோரன்ஸ் கென்னடி கலந்து சிறப்பித்தார். முதன்மை அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் நடன நாடகத்துறை தலைவர் கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார் கலந்து சிறப்பிக்க, சிறப்பு அதிதிகளாக உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர் திருமதி ரீஷா பத்திரண, விபுலானந்த மணிமண்டப தலைவர் வெ.ஜெயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலைய விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய பரதநாட்டிய வளவாளர் திருமதி சர்மினி சுதாகரன், உதவி வளவாளர் செல்வி ஜெயகோபன் தக்சாளினி ஆகியோர் நடனதின விழாவை நெறியாள்கை செய்தனர். இந்த நிகழ்வில் மேலும் பல அதிதிகள் பங்கேற்க, விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் கண்கவர் நடன நிகழ்ச்சிகள் மேடையேறின.

கலைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றி வரும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி ஃப்ளோரன்ஸ் கென்னடி, நடன நாடகத்துறைத் தலைவர் கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார், பரதநாட்டிய வளவாளர் திருமதி சர்மினி சுதாகரன், உதவி வளவாளர் செல்வி ஜெயகோபன் தக்சாளினி ஆகியோர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.







மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு ஜெயராஜ் நன்றியுரை ஆற்றினார். விழாவில் பங்கேற்ற 150 நடனத்துறை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் அதிதிகளால் வழங்கப்பட்டன. நடனத்துறை மாணவர்களின் பெற்றோர்களால் மணிமண்டபம் நிரம்பி வழிந்தது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# விபத்தினால் பாதிக்கப்பட்ட மூவருக்கு குவைத் அரசாங்கத்தின் நிவாரண உதவி

கல் எளிய நகரின் மத்தியில் கடந்த ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு குவைத் அரசாங்கம் மற்றும் குவைத் மக்கள் வழங்கிய நிதியுதவியில் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்வு தொழிலாளர் தினமான மே 1ஆம் திகதி கல் எளிய கிராமத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மேற்படி விபத்தினால் அன்றாட சுயதொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியொன்று முழுமையாக சேதமாகியது. மேலும் சிங்கள சுயதொழிலாளிகள் இருவரின் முச்சக்கர வண்டிகளும் பகுதியளவில் சேதத்திற்குள்ளாகின. இதனால் இவர்கள் தொடர்ந்தும் தமது சுயதொழிலை மேற்கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், இவர்களின் இந்த விடயம் பலராலும் இலங்கையிலுள்ள முன்னணி சமூக சேவை அமைப்பான 'அல் ஹிமா' அமைப்பின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.





## அல் ஹிமா அமைப்புக்கு பிரதேச மக்கள் பாராட்டு

இதனைக் கருத்தில் கொண்ட ஹிமா அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஏ. நூறுல்லாஹ் (நளீமி), பாதிக்கப்பட்டோருடன் உடனடியாக தொடர்பை ஏற்படுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இனங்களிடையே நல்லிணக்கத்தின் தேவை உணரப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வித பாகுபாடுமின்றி உதவ வேண்டுமென்று குவைத் நாட்டின் பரோபகாரியான ஷெய்க் யாகூப் யூசுப் அல்துஹைம் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஆட்டோ முழுமையாக பாதிக்கப்பட்ட நபருக்கு அவரது சொந்த நிதியிலிருந்து புதிய ஆட்டோ வண்டியொன்று வழங்கப்பட்டது. பகுதியளவில் பாதிக்கப்பட்ட இருவருக்கும் தலா ரூ. 50,000 வீதம் (மொத்தம் 1 இலட்சம் ரூபா) நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளமை இனஒற்றுமை முயற்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்நிகழ்வில் அதிதிகளிலொருவராக கலந்து கொண்டு உரையாற்றிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் எம்.எம். மொஹமட், "அண்மையில் நடந்த விபத்தினால் பாதிக்கப்பட்ட சகோதரர்களின் மனோநிலையை உணர்ந்து குவைத் நாட்டில் வசிக்கும் பரோபகாரி யூசுப் அல்துஹைம் எவ்வித இனபேதங்களும் பார்க்காமல் உதவ முன்வந்ததை நான் பாராட்டுகிறேன். எந்த நாடு, எந்தத் தேசம், எந்த இனம் என்று பார்க்காமல் உதவ முன்வந்ததை நான் மனமார பாராட்டுகிறேன். இந்த உணர்வு மனிதனாக வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் வர வேண்டும். இனநல்லிணக்கத்திற்கான ஒரு ஆரம்பம் இதுவாகும். இதனை பெற்றுக்கொடுக்க உதவிய அல்ஹிமா அமைப்புக்கு எனது உளப்பூர்வ நன்றிகள்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மதத்தலைவர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்ததோடு, அல்ஹிமா அமைப்பினால் இங்கு மேற்கொள்ளப்பட்ட இனநல்லிணக்க செயற்பாட்டை அனைவரும் பாராட்டினர்.

# தமிழ் சினிமாத்துறையில் அடுத்தடுத்து துயரங்கள்!



தமிழ் சினிமா கடந்த 5 மாதங்களில் இரு நகைச்சுவை ஜாம்பவான்களை இழந்து விட்டது. முதலில் மயில்சாமி, நேற்று மனோபாலா காலமானார். சினிமாவில் வில்லன், கதாநாயகன், குணச்சித்திரம் உள்ளிட்ட பாத்திரங்களை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நகைச்சுவை என்றால் அது ஆசீர்வதிக்கப்பட்டவர்களால் மட்டுமே முடியும். அழுகை காட்சியில் கூட நடித்துவிடலாம். ஆனால் ஒருவரை சிரிக்க வைப்பது என்பது கடினமானது.

அந்த வகையில் இந்திய சினிமாவில் எத்தனையோ நகைச்சுவை ஜாம்பவான்கள் உள்ளனர். அந்த வகையில் தமிழ் சினிமாவில் எத்தனையோ பேர் வந்தாலும் நாகேஷ், பாலையா, கவுண்டமணி, செந்தில், விவேக், வடிவேல், சந்தானம், மயில்சாமி, மனோபாலா உள்ளிட்டோரின் நகைச்சுவைக்கு நிகரில்லை.

இவர்களால் நிறையப் படங்களில் கதையே இல்லாவிட்டாலும் அப்படங்கள் ஓடிய காலங்கள் உள்ளன. அந்த வகையில் ஏற்கனவே நாகேஷ், பாலையா, சந்திரபாபு, விவேக், மயில்சாமி உள்ளிட்டோரை சினிமா உலகம் இழந்து விட்டது. நேற்று மனோபாலா காலமானார்.

எத்தனையோ படங்களில் நகைச்சுவையில் கலக்கிய இவரது இழப்பு சினிமா உலகத்தை மட்டுமல்லாமல் ரசிகர்களையும் மிகவும் வேதனையடையச் செய்துவிட்டது. கடந்த 15 நாட்களாக மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த மனோபாலா நேற்று காலமானார். நடிகர், தயாரிப்பாளர், நகைச்சுவை நடிகர் என்ற பன்முகத் திறமை கொண்டவர் அவர். நிறைய படங்களில் நடித்துள்ளார். இயக்கியும் உள்ளார்.

இவரது முதல் படம் ஆகாயகங்கை. ஊர்க்காவலன், பிள்ளை நிலா, மல்லு வேட்டி மைனர் உள்ளிட்ட படங்களை இயக்கியுள்ளார். சதுரங்க வேட்டை என்ற படம் இவரது தயாரிப்பில் உருவானது. நகைச்சுவை என வந்துவிட்டால் தன்னை விட வயதில் சிறியவர்கள் கிண்டல் செய்தாலும் அதை பெரிதுபடுத்தாமல் நடித்து மக்களை சிரிக்க வைப்பார்.

சந்தானம் அவருடைய உடல் அமைப்பை எத்தனையோ முறை கிண்டல் செய்து நகைச்சுவை காட்சிகளை வைப்பார். ஆனால் எதற்கும் அசராத கலைஞனாக மனோபாலா இருந்தார். அது போல் சினிமாத்துறையில் யார் மறைந்தாலும் அந்த இறப்புக்கு இரங்கல் தெரிவிக்க முதல் ஆளாக மனோபாலா வந்துவிடுவார். இறுதியாக மயில்சாமியின் மறைவுக்கு வந்த மனோபாலா கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த ஆண்டு பிறந்து 5 மாதங்களில் இரு நகைச்சுவை நடிகர்களை சினிமா உலகம் இழந்து விட்டது. இது உண்மையில் சினிமாத்துறைக்குக் மட்டுமல்ல ரசிகர்களுக்கும் பேரிழப்பாக இருக்கும். இது சினிமா துறைக்கு சாபக்கேடா என்று நடிகர் மதன்பாப் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

# இ/எம்பி/எக்பர்த் தமிழ் மகாவித்தியாலய அமுதவிழா

**புளுத்தொட்ட எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயம் 1942 ஆம் ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களை கொண்டு 12 மாணவர்களும் ஒரு ஆசிரியருடனும் ஆரம்பப் பிரிவு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியான வளர்ச்சியோடு 1994 இல் க.பொ.த சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டு இடைநிலை பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 2017.05.12 எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்தில் க.பொ.த உ/த தரம் கொண்ட பாடசாலையாக எழுச்சி பெற்றது. அத்தோடு இ/எம்பி/எக்பர்த் தமிழ் வித்தியாலயம் என்ற நாமம் இ/எம்பி/எக்பர்த் தமிழ் மகாவித்தியாலயம் என மாற்றப்பட்டது. 2021 புலமைப்பரிசில் பரீட்சையில் எம்பிலிபிட்டிய வலய தமிழ்மொழி மூல பாடசாலைகளில் முதல் புள்ளி பெற்ற பாடசாலையாக தேர்வானதுடன் க.பொ.த உயர்தர பரீட்சையில் 100 வீத பெறுபேற்றை பெற்று தமிழ், சிங்களை இரு மொழிகளிலும் எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் முதல் பாடசாலையாக வலம் வருகிறது.**



ஆசிரியர் குழாம்



க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 82வீத பெறுபேற்றை பெற்று எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் முதலிடத்தை தக்க வைத்த கொண்டதோடு பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக பத்மநாதன் ரஜீவ் என்ற மாணவன் 9A சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. 2022 புலமைபரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளை பெற்று எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் மீண்டும் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டது. அமுத விழாவை முன்னிட்டு கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட போட்டிகள் நடத்தப்பட்டன.

அமுத விழாவின் இறுதி நிகழ்வுகள் 25.04.2023 பாடசாலை அதிபர் திருமதி குமுதினி மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், விசேட அதிதிகளாக சப்ரகமுவ மாகாண கல்வி பணிப்பாளர் W.S.A.புஸ்பகுமார டயஸ், சப்ரகமுவ மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் (தமிழ் பிரிவு) திருமதி. சகுந்தலா மனோகரன் மற்றும் எம்பிலிபிட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் லெப்டினன் கேர்ணல் G.G.அனுர அபேவிக்கிரம, கொலன்ன கோட்ட கல்வி பணிப்பாளர் W.சுஜித் பிரியந்த ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையின் மைதானத்தில் முற்பகல் 9.15க்கு பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடன் விசேட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு கொடியேற்ற நிகழ்வு, ஆளுநரால் மரக் கன்று நாட்டப்பட்டு மங்கள விளக்கேற்றப்பட்டு இறை ஆராதனையுடன் கலாசார நிகழ்வுகள் ஆரம்பமாகின.நடன ஆசிரியரின் நெறியாள்கையில் பாடசாலை மாணவிகளால் வரவேற்பு நடனம், ஆசிரியர் M.அன்பழகன் தமிழ் மொழியிலும் ஆசிரியர் .M.S.N.பாரிஸ் சிங்கள மொழியிலும் ஆசிரியர் T. இராஜதிலகன்.

ஆங்கில மொழியிலும் வரவேற்புரை நிகழ்த்தினர். இதனை தொடர்ந்து வலயக்கல்வி பணிப்பாளர் லெப்டினன் கேர்ணல் G.G.அனுர அபேவிக்கிரம சிறப்புரையை தொடர்ந்தும் கோட்டக் கல்வி பணிப்பாளர் W.சுஜித் பிரியந்தவும் சிறப்புரையாற்றினார்.அத்தோடு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் திருமதி.குமுதினி மோகன்ராஜ் தலைமையுரை நிகழ்த்தினார். கதம்ப நடனமும் அரங்கேற்றப்பட்டது. பாடசாலை முன்னாள் அதிபர்களான M.S.M. பாறுக், அமரர் V.இராசலிங்கம் ஐயா, அமரர் S.மரியசூசை மரியமனானன், I.அல்பிரட், ஜனாப்.F.M.காசிம், V.பாஸ்கரன் ஆகியோர் அதிபர் திருமதி S.குமுதினியால் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிப்பு நிகழ்வை பாடசாலை 1993 சாதாரண தர வகுப்பு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவவினால் கௌரவிப்பு நடைப்பெற்றதுடன் உரையும் நிகழ்த்தப்பட்டது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான சின்னம் வழங்கும் நிகழ்வு 2005 சாதாரண தர வகுப்பு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு சின்னம் வழங்குதல் 2001 சாதாரண தர மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.எமது பாடசாலையில் கல்வி கற்று கல்வியற் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு 2002 சாதாரண தர மாணவர்களால் கௌரவிக்கப்பட்டனர். 1998 சாதாரண தர மாணவர்களால் பாடசாலை ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.2009 சாதாரண தர வகுப்பு மாணவர்களால் பாடசாலையில் கல்வி கற்று அரச ஊழியர்களாக சேவையாற்றுவோருக்கான கௌரவிப்பு நடைபெற்றது. அதனையடுத்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களின் இசை நடன நிகழ்வுகளும் நடைபெற்றன. பாடசாலை பிரதி அதிபர் S.கமலநாதனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.








பாடசாலையின் அதிபர் மற்றும் ஆளுநருடன் பழைய மாணவர்கள்


ஆளுநருடன் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர்






பாடசாலை பழைய மாணவர் குழாம்





தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிர்ப்பு

# ஐ.ம.சக்தியின் மனு மீதான பரிசீலனை ஜூன் 09 இல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி சமர்ப்பித்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, எதிர்வரும் ஜூன் (09) இல், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் காமினி அமரசேக்கர ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் இந்த மனு நேற்று (03) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் சர்வஜன வாக்குரிமை உள்ளிட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

# தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்பம்

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தனித் தனி கோட்பாடு காணப்படும் நிலையிலும் தற்போது தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களில் ஒன்று படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொது விவகாரங்களில் பல்வேறு விடயங்களிலும் எதிர்க் கட்சிகள் ஒரே நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், முற்போக்கு உரையாடல்கள் மூலம் உலகின் முதல்தர நாடாக இலங்கையை உருவாக்குவதே தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களின் பிரதானிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நேற்று விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

கொழும்பு மென்டரின் ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவருடன் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.



இந்நிகழ்வில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

சர்வதேச ஊடக தினத்தில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் நாடு தொடர்பான சமூக,பொருளாதார அரசியல் உரையாடலைத் தொடங்கியுள்ளதில் மகிழ்ச்சியடைகிறோம். அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்துவமான சிந்தனை மற்றும் கோட்பாடுளைக் கொண்டுள்ளன. எனினும், தற்போது தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களில் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உதாரணமாக ஊடகக் கட்டுப்பாட்டிற்காக அரசாங்கம் தயாரிக்கும் ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டத்தைக் குறிப்பிடலாம். அதன் மூலம் சுதந்திர ஊடகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எதிர்ப்பது தொடர்பில் எமக்கு பொதுவான கருத்துக்கள் உள்ளன.

அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதன் மூலம், மக்களை பயங்கரவாதிகளாகப் பார்க்கும் ஜனநாயக விரோத செயலை எதிர்ப்பது தொடர்பில் பொதுவான கருத்தும் எம்மத்தியில் உள்ளது. அத்துடன் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில், நாட்டின் வங்குரோத்தான நிலையிலும் பணம் சுரண்டும் முயற்சி, மற்றும் அரசின் பிற்போக்குத்தனமான வேலைத்திட்டத்தை முறியடிக்கவும் எதிர்க்கட்சியாக நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

## A/L விடைத்தாள்...

பிள்ளைகளுக்கன்றி சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கே அநீதியாக அமையுமென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இக்காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களின் வசதி படைத்த பிள்ளைகள், லண்டன் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி அதனையடுத்து சர்வதேச பல்கலைக் கழகங்களில் டிப்ளோமோ கற்று பட்டப்படிப்பை மேற்கொள்ள வெளிநாடு செல்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பெற்றோரிடம் பணம் இருப்பதால் அவர்களால் அதனை சுமக்க முடியும். எனினும், நாட்டிலுள்ள சாதாரண மக்களின் பிள்ளைகள் எமது நாட்டிலுள்ள பாடசாலைகளில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அவர்களுடைய எதிர்காலத்தையே இந்த பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் பாதிப்படையச் செய்கின்றனர்.

## வர்த்தகத்துக்குச் சாதகமான...

அதற்குச் செலவிடப்படும் நேரத்தைக் குறைக்கவும், தேவையான தகவல்களை எளிதாகப் பெறுவதற்கான வாய்ப்புக்களை இச்செயலகங்கள் எளிதாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, இச்செயலணிகளுக்கு முறையான பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன. மேலும் இதற்கான நிலையான முறைமைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

வர்த்தகப் பிரவேசத்தை இலகுபடுத்துவதற்காக கம்பனி பதிவாளர் அலுவலக சட்ட கட்டமைப்புகள் மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதற்காக வர்த்தக பதிவுக்கான செயலணி உள்ளடக்கப்படும்.

இந்த செயலணியின் ஊடாக டிஜிட்டல் கையொப்ப கட்டமைப்பை உருவாக்குதல், கம்பனிச் சட்டத்திற்கு இறுதிப் பயனாளிகளின் உரிமையை இணைத்தல் மற்றும் கம்பனி பதிவாளரால் (RoC) பயன்படுத்தப்படும் படிவங்களை இலகுபடுத்தல் உள்ளிட்ட முக்கிய சேவைகள் வழங்கப்படும்.

காணிப் பதிவு, தேவையான சான்றிதழ்கள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'சொத்துப் பதிவு' குறித்த செயலணியும் அமைக்கப்பட உள்ளது. நில அளவைத் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, மேல்மாகாண வருவாய் திணைக்களம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் உட்பட ஏழு நிறுவனங்களை இச்செயலணிகள் உள்ளடக்கும்.

காணி உறுதி விபரங்களை தேடல், இலத்திரனியல் உறுதிப் பதிவு மற்றும் கட்டிடம்/வீதி எல்லைச் சான்றிதழைப் பெறுவதற்கான நேரம், செலவு மற்றும் நடைமுறைகளைக் குறைக்க, ஈகாணி முறைமை இந்த செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்படும். காணிப்பதிவேட்டு தரவுகளை பெற இணைய வசதி அளித்தல்,முத்திரைக் கட்டணத்தைக் கணக்கிடுதல் , பத்திரங்களைப் பதிவு செய்ய ஒன்லைன் வசதிகளை வழங்குதல்,காணி ஆவணத்தில் உள்ள திட்ட விபரங்களை இணையதளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேல்மாகாணத்துடன் தொடர்புடைய காணிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இணைய சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## விலைச் சூத்திரத்துக்கு அமைய..

தெரிவித்துள்ளார். இதன்படி 12.5 கிலோ சிலிண்டர் ஒன்றின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் 12.5 சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் புதிய விலை 3,638.00 ரூபாவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 05 கிலோ சிலிண்டர் ஒன்றின் விலை 40.00 ரூபாவாலும், 2.3 கிலோ சிலிண்டர் ஒன்றின் விலை 19.00 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இதுவரை 1,502.00 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த 05 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் 1,462.00 ரூபாவாகவும் 700.00 ரூபாவாக விற்கப்பட்டு வந்த 2.3 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் 681.00 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபை தேர்தலையே...

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே ரவூப் ஹக்கீம் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டின் தேர்தல் வரைபடம் மாற்றப்பட்டுள்ளது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவைப் பயன்படுத்தி தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றன. அதனால்

சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படும் அபாயமுள்ளது. அது தொடர்பில் நாம் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலையன்றி மாகாண சபைத் தேர்தலை நாம் கோருகிறோம். பழைய தேர்தல் முறையில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐம்பது இலட்சம் ரூபா சரீர...

வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீ ரங்காவை, 50 இலட்சம் ரூபா சரீரப் பிணை மற்றும் 20,000 ரூபா பிணையிலும் விடுவிக்குமாறு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கு முன்னர் நீதிமன்ற உத்தரவின்படி வேறு வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜே. ஸ்ரீரங்கா, நேற்றைய தினம் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்த குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு அதிகாரிகள், சந்தேக நபர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட சம்பவத்துக்கு மறுநாள் வெளிநாட்டுக்குச் சென்ற சந்தேகநபரான இவோன் பெரேராவுடன் சந்தேக நபரும் இணைந்து செயற்பட்டிருந்தாரென நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தனர்.

சந்தேகநபரான ஸ்ரீரங்காவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் கிளர்ச்சியாக உருவெடுத்ததாகவும், பொருட்களுக்கு சேதங்களை ஏற்படுத்தி சட்டவிரோத கூட்டத்தின் உறுப்பினராக அவர் செயற்பட்டு அரச அதிகாரிகளின் கடமைகளுக்கு தடைகளை விதித்தாரென குற்றச்சாட்டுகளையும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் அவர்மீது சுமத்தியிருந்தது.

சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு அந்த அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

சந்தேகநபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, தமது கட்சிக்காரர் ஊடகவியலாளர் என்றும் அவர் சுவர்வாஹினி ஊடக வலையமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரியென்றும் செய்தி சேகரிப்புக்காகவே அவர், அன்றைய தினம் அங்கு சென்றிருந்ததாகவும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்பான விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் சம்பவம் இடம்பெற்று 09 மாதங்கள் கடந்துள்ளதால், தமது கட்சிக்காரரை பிணையில் விடுதலை செய்யுமாறும் அவர் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்ற பதில் நீதவான் இலங்கசிங்க பண்டார, அவரை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

அந்த வழக்கை மீண்டும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு...

மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்படல், கொலைக்குள்ளாதல் மற்றும் கைவிடப்படுகின்ற சம்பவங்களை கருத்திற்கொண்டு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் இதுவரை 80 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் 60 சிறுவர்கள் கைவிடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போதைய சட்டத்துக்கமைய குழந்தைகளை கைவிட்டுச் செல்லும் பெற்றோருக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய திருத்தத்துக்கமைய குழந்தைகளை பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைத்துச் செல்லும் பெற்றோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக தண்டனைச் சட்டக் கோவையில்கொண்டுவரப்படவுள்ள திருத்தம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சினூடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

## 3,000 மாணவருக்கு இரண்டு...

முன்னெடுக்கின்றன. இதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் க.பொ.த சதாரண தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்துக்கு தகுதி பெற்ற 3,000 மாணவ, மாணவியருக்காக இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக நாடு முழுவதிலுமுள்ள 100 வலய அலுவலகங்களை உள்ளடக்கியதாக வலயமொன்றுக்கு 30 என்ற அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மேல்மாகாணத்தின் 11 கல்வி வலயங்களில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய 110 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கலின் அடையாள ரீதியாக ஜனாதிபதியினால் புலமைப் பிரிசில்கள் நேற்று வழங்கப்பட்டன.

இதன் கீழ், புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு உயர்கல்வியை நிறைவு செய்யும் இரண்டு வருட காலப்பகுதிக்கு மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளது. இதற்காக 360 மில்லியன் ரூபா செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி புலமைப் பரிசில் வேலைத்திட்டத்துக்கு இணையாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பாடசாலைப் பைகள், அப்பியாச கொப்பிகள், குடை, கடிகாரம் மற்றும் 5,000 ரூபா பெறுமதியான பரிசில்களும் புலமைப் பரிசில் பெற்றவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் டபிள்யூ.ஏ.சரத் குமார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புலமைப் பரிசில் பெற்றுக்கொண்ட ஏனைய மாணவர்களுக்கான புலமைப் பரிசில் சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் என்பவற்றை அடுத்த இரு வாரங்களுக்குள் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சுகாதார வழிமுறைகளை...

வலியுறுத்தியுள்ளது. "தினசரி நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்துள்ள போதிலும், பாரியவில் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதால், நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும், கொரோனா வைரஸால் மக்கள் பாதிக்கப்பட முடியாதென்று கூறுவதற்கு இடமில்லையென, சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் டொக்டர் சமிதா கினிகே தெரிவித்துள்ளார். தொற்றுநோயியல் பிரிவின் புள்ளிவிபரங்களின்படி, கடந்த 03 நாட்களில் சராசரியாக 19 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, முகக்கவசம் அணிதல் உட்பட கொவிட்19 பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டுமென சுகாதார தரப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## இலங்கையின் பொருளாதார மீட்சியில்...

சனல் நியுஸ் ஏசியாவுக்கு வழங்கிய பேட்டியில் வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி சாத்தியமாவது குறித்து இலங்கை எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டுள்ளதென்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

நம்பிக்கையின் ஒளிக்கீறுகள் காணப்படுகின்றன, ஆனால் நாங்கள் இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை.

இலங்கையின் தற்போதைய நம்பிக்கைக்கு பல காரணங்கள் உள்ளன. டொலர் நிலவரம் ஸ்திரமானதாக மாறியுள்ளமை, சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமை, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பணவீக்கம் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளமை போன்றவையாலே இந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவி தொடர்பில், மறுஆய்வு குறித்து இலங்கை எவ்வளவு தூரம் நம்பிக்கையுடன் உள்ளதென்ற கேள்விக்கும் அமைச்சர் பதிலளித்தார். நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவுகிறது. உணவுத் தட்டுப்பாடுகள் நீங்கி, நீண்டவரிசைகளும் இல்லாமலாகியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவிக்கான அங்கீகாரத்தை பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டிய பல நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை அனைவருக்கும் சமமானதாக காணப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார். வர்த்தகத்துக்குச் சாதகமான சூழலை...

அதற்குச் செலவிடப்படும் நேரத்தைக் குறைக்கவும், தேவையான தகவல்களை எளிதாகப் பெறுவதற்கான வாய்ப்புக்களை இச்செயலகங்கள் எளிதாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, இச்செயலணிகளுக்கு முறையான பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.மேலும் இதற்கான நிலையான முறைமைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

வர்த்தகப் பிரவேசத்தை இலகுபடுத்துவதற்காக கம்பனி பதிவாளர் அலுவலக சட்ட கட்டமைப்புகள் மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதற்காக வர்த்தக பதிவுக்கான செயலணி உள்ளடக்கப்படும்.

இந்த செயலணியின் ஊடாக டிஜிட்டல் கையொப்ப கட்டமைப்பை உருவாக்குதல், கம்பனிச் சட்டத்திற்கு இறுதிப் பயனாளிகளின் உரிமையை இணைத்தல் மற்றும் கம்பனி பதிவாளரால் (RoC) பயன்படுத்தப்படும் படிவங்களை இலகுபடுத்தல் உள்ளிட்ட முக்கிய சேவைகள் வழங்கப்படும்.

காணிப் பதிவு, தேவையான சான்றிதழ்கள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'சொத்துப் பதிவு' குறித்த செயலணியும் அமைக்கப்பட உள்ளது. நில அளவைத் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, மேல்மாகாண வருவாய் திணைக்களம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் உட்பட ஏழு நிறுவனங்களை இச்செயலணிகள் உள்ளடக்கும்.

காணி உறுதி விபரங்களை தேடல், இலத்திரனியல் உறுதிப் பதிவு மற்றும் கட்டிடம்/வீதி எல்லைச் சான்றிதழைப் பெறுவதற்கான நேரம், செலவு மற்றும் நடைமுறைகளைக் குறைக்க, ஈகாணி முறைமை இந்த செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

காணிப் பதிவேட்டு தரவுகளை பெற இணைய வசதி அளித்தல், முத்திரைக் கட்டணத்தைக் கணக்கிடுதல் , பத்திரங்களைப் பதிவு செய்ய ஒன்லைன் வசதிகளை வழங்குதல்,காணி ஆவணத்தில் உள்ள திட்ட விபரங்களை இணையதளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேல்மாகாணத்துடன் தொடர்புடைய காணிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இணைய சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிதி அமைச்சர் சீதாராமனை...

குறிப்பிட்டுள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது ஆண்டு கூட்டத்தின் ஒரு பகுதியாக, இரு நாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கான பொருளாதார கூட்டாண்மை குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவரது டுவிட்டரில் பதிவிடப்பட்டுள்ளது.

## விண்ணப்ப கால அவகாசம்...

முன்தினம் வரை இதற்காக ஆறு நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. தற்போது இந்தக்கால அவகாசம் இன்று (04) வரை நீடிக்கப்பட்டுள்ளது. இக் காலப்பகுதிக்குள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க முடியுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பௌதீகவியல் (01), இரசாயனவியல் (02), கணிதம் (07), விவசாய விஞ்ஞானம் (08), உயிரியல் (09), இணைந்த கணிதம் (10), தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் (29), வணிகக்கல்வி (32), பொறியியற் தொழில்நுட்பவியல் (65), உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (66), தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (67) மற்றும் ஆங்கிலம் (73) ஆகிய பாடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள், தமது பிள்ளை அல்லது குடும்ப உறுப்பினர்கள் பரீட்சைக்கு தோற்றியிருப்பின், அவர்கள் தோற்றிய பாடம் அல்லாத ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முடியுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022.12. 31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடிமென தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் https://onlineexams.gov.lk/eic இணையத்தளமூடாக விண்ணப்பிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேலும் கோரியுள்ளார்.

## லொறியுடன் மோதிய...

முன்தினம் இரவு 9.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். டிபென்டர் வாகனம் அதிவேகமாக பயணித்ததால், முன்னால் சென்ற சிறிய லொறியுடன் மோதியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் லொறியில் பயணித்த 05 பேரும், பாராளுமன்ற உறுப்பினரின் சாரதியும் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வாரியபொல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பிரபல நடிகர், இயக்குநர்...

இயக்கத்தில் வெளியான புதிய வார்ப்புகள் படத்தின் மூலம் உதவி இயக்குநராக அறிமுகமான மனோபாலா, அப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்திலும் நடித்திருந்தார்.

மனோபாலாவுக்கு கடந்த ஜனவரி மாதம் லேசான மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டு வீடு திரும்பினார். கடந்த ஒரு மாத காலமாக மனோபாலாவுக்கு உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதற்காக சிகிச்சை எடுத்து வந்த நிலையில் ,உடல்நலக்குறைவால் அவர் நேற்று புதன்கிழமை காலமானார். அவரது மறைவுக்கு பிரபலங்கள், ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## Stock market edges up on low volumes...

Daily Market Watch
03rd May 2023

Capital TRUST Research (Pvt) Ltd
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

### Market Commentary

The All Share Price Index gained 1.02% to close the trading session at 8,799.91 led by gains in HNB, Expolanka Holdings, Vallibel One, Melstacorp and Sampath Bank which rose by 4.6%, 3.0%, 1.8%, 2.7% and 1.3% respectively.Turnover remained low at LKR 611.6 mn, with trading in John Keells Holdings accounting for 21% of the total. Meanwhile, T-Bill rates remained broadly unchanged at yesterday's T-Bill auction, with 3 Month T-Bill rates increasing by 8 bps, whilst the 6 Month and 12 Month rates rose by 15 bps and 14 bps respectively.


### T Bill Auction Summary

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |


### Market Performance

| | 03.05.2023 | 02.05.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,799.9 | 8,711.5 | 1.02 |
| S&P SL 20 Index | 2,534.0 | 2,514.4 | 0.78 |
| Turnover (LKR mn) | 611.7 | 983.9 | -37.8 |
| Foreign Purchases (LKR mn) | 25.8 | 60.0 | -57.1 |
| Foreign Sales (LKR mn) | 99.6 | 60.8 | 63.9 |
| Market Cap (LKR bn) | 3,750.3 | 3,707.0 | 1.2 |
| Market Cap (US$ bn) | 11.7 | 11.6 | 1.2 |
| Traded Companies | 234 | 250 | -6.4 |
| Market PER (x) | 4.8 | 4.8 | 1.0 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 1.1 |
| Dividend Yield (%) | 4.2 | 4.3 | -1.2 |

### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown





### Key Rates

| | 03.05.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.03% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 23.14% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 35.50% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Union Chemicals Lanka PLC (UCAR) - LKR 17.00. XD date - 13.06.2023.

Malwatte Valley Plantation PLC (MAL) - LKR 0.16. XD date - 26.06.2023.

ON'ALLY Holdings PLC (ONAL) - LKR 2.30. XD date - 09.05.2023.

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date - 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date - 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date - 29.05.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date - 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# தினகரன் Business

# இலங்கையில் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்த Dialog Axiata குழுமம், Bharti Airtel

Dialog Axiata பி.எல்.சி ((“Dialog”) Axiata குழுமம் பெர்ஹாட் Dialog Axiata மற்றும் (“Dialog”) Axiata வரையறுக்கப்பட்டது, ஒட்டுமொத்தமான நிறுவனங்கள் தமது தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான ஒப்பந்த விதிமுறை பத்திரத்தில் கையெழுத்திடுகின்றன. பரிவர்த்தனை முடிவடைந்த பின்னர் Airtel Lankaவின் மதிப்பிற்கு ஈடான Dialog, இன் புதிய பங்குகளை Airtel பெற்றுக் கொள்ளும் உரிய தரப்பினருக்கும் ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. முன்மொழியப்பட்ட பரிவர்த்தனையானது நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ஏதேனும் கணிசமான முன்னேற்றங்கள் இருந்தால் உரிய தரப்பினர் அது குறித்த அறிவிப்புகளை வெளியிடுவர்.

**Dialog Axiata குழுமம் பற்றி**

Dialog Axiata குழுமம் (Axiata) குழுமம் பெர்ஹாட் ( (Axiata)) இன் துணை நிறுவனமாகும். இது இலங்கையின் முன்னணி QuadPlay (கையடக்க தொலைபேசி, நிலையான தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் (இணையம்) இணைப்பு வழங்குனர் நிறுவனமாகும். நிலையான தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் கட்டண தொலைக்காட்சி, டிஜிட்டல் சேவைகள், நிதி சேவைகள், மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை Dialog Broadband Networks (DBN)வரையறுக்கப்பட்ட (தனியார்), Dialog Television (DTV) வரையறுக்கப்பட்ட (தனியார்), Digital Holdings Lanka வரையறுக்கப்பட்ட (தனியார்), Dialog Finance பி.எல்.சி, மற்றும் H One வரையறுக்கப்பட்ட (தனியார்) ஆகிய தன்னுடைய துணை நிறுவனங்கள் மூலமாக வழங்குகிறது.

**Airtel ஸ்ரீலங்கா பற்றி**

2009 ஆம் ஆண்டில் இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் ஸ்ரீ லங்கா நிறுவனம் தற்போது ஒரு மில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத் தொடர்பு வலயமாகும். Airtel Sri Lanka வழங்கும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் சேவை சிறப்புகள் இலங்கை இளைஞர்கள் மத்தியில் வேகமாக பரவியுள்ளது. தற்போது Airtel இலங்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் அதி நவீன 5G தயாரான 4G வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளது.



சிறிலங்கா இன்ஷ்ரன்ஸின் மாரவில புதிய கிளை இல,83A நீர்கொழும்பு வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவன முகாமைத்துவம், பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தன எல். அலுத்கம, மனித வளங்கள் மற்றும் பணியாளர் உறவுகள் பிரதிப் பொது முகாமையாளர் ரோஹித அமரபால, பிரதிப் பொது முகாமையாளர் சமிந்த குணசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலகளாவிய விற்பனை சந்தையில் முதலிடத்தில் உள்ள Samsung Soundbar

ஆராய்ச்சி நிறுவனமான (Future Source Consulting) ஆய்வின் முடிவுகளின் படி Samsung Electronics உலகளாவிய Soundbar சந்தையில் முன்னணியில் மதிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரியில் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையின்படி, Samsung 20.2% சந்தைப் பங்கைக் கொண்டு தொடர்ச்சியாக 9 ஆவது ஆண்டாக Soundbar சந்தையில் முதலிடத்தில் உள்ளது.

பிரதான வரிசையில் பிரீமியம் Qseries உட்பட Samsung Soundbars சக்திவாய்ந்தவை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக உயர்தர ஒலியுடன் மேம்பட்டவை, தொலைக்காட்சிகளுக்கு உகந்தவை மற்றும் நேர்த்தியாகவும் நவீனமாகவும் இருக்கும். SpaceFit Sound போன்ற அம்சங்கள் அதன் தனித்துவமான ஒலி அனுபவத்திற்காக பாவனையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் பாராட்டப்பட்டுள்ளன. Samsung Soundbars தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களின் இதயங்களை வென்றுள்ளன. HWQ990B ஆனது AVForums போன்ற விற்பனை நிலையங்களால் 2022 ஆம் ஆண்டின் Best in Class வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, HWS800B ஈர்க்கக்கூடிய ஒலியை வழங்குவதாக விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு, Samsung வாடிக்கையாளர் மற்றும் Home Theater ஆர்வலர்களை ஒரே மாதிரியாக ஈர்க்கும் வகையில் மிகவும் அதிவேக சினிமா ஒலியை அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் முதன்மை ஓடியோ அம்சங்களுடன் அதன் Soundbar வரிசையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்கிறது.


## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/04/30 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/05/25 மற்றும் 2023/05/26 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சீ,
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577


## 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெறுதல்

பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2024 வரவு செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவின் மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் சேர்ப்பதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெறுவதற்கு இது உத்தேசிக்கப்பட்டுள்ளது. பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களால் அதற்காக ஏதேனும் அபிவிருத்தி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டால் 30.06.2023 க்கு முன்னர் பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**எச்.ஏ.ஜீ. நிஸ்ஸங்க**
**செயலாளர்**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**2023.05.04**

எதிர்பாராத சவால்களுக்கு மத்தியில்

# பீப்பள்ஸ் லீசிங்கின் காலாண்டு இலாபம் 2022/23 பாராட்டுக்குரியது



பீப்பள்ஸ் லீசிங்கின் குறிப்பிடத்தக்க காலாண்டு இலாபம் 2022/23 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் 959 மில்லியன் ரூபாய். பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் வரிக்குப் பின்னரான இலாபம் 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த காலப்பகுதியில் 1,637 மில்லியன் ரூபாய். இது சொத்துக்கள் மற்றும்

பொறுப்புகளை புத்திசாதுர்யமாக நிர்வகிக்கும் அதேவேளையில் சவாலான காலங்களில் அதன் முக்கிய இலக்குகளை நிர்வகிக்கும் நிறுவனத்தின் நீடித்த திறனை வெளிப்படுத்துகிறது. நாட்டில் நிலவும் சாதகமற்ற சமூகபொருளாதாரக் கண்ணோட்டம் இருந்தபோதிலும், மேல்நிலை வட்டி வருமானத்தை 28.3% அதிகரிப்பால் வலுப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், டிஜிட்டல் மயமாக்கல் இயக்கம் மற்றும் நிறுவனம் முழுவதும் ஊழியர்களால் ஏகமனதாக செயற்படுத்தப்பட்ட பல செலவுகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் மூலம் நாட்டின் வளர்ந்து வரும் பணவீக்கச் சூழ்நிலைக்கு மத்தியில், நிறுவனம் செயற்பாட்டுச் செலவுகளை ஒற்றை இலக்க அளவில் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது.

# மக்கள் வங்கியின் 'Mahajana Mehevara' டி சொய்சா வைத்தியசாலை புனரமைப்புக்கு உதவி



மக்கள் வங்கியின் ''Mahajana Mehevara' நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) நிகழ்ச்சித் தொடரானது பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையில் மூன்று மில்லியன் ரூபா செலவில் அத்தியாவசியமான பல புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு உதவியுள்ளது. சிகிச்சை விடுதிகளில் உள்ள 125 படுக்கைகளுக்கு நிறம் பூசுதல், மேற்கூரையை சரி செய்தல், தாழ்வாரங்கள் மற்றும் சிகிச்சை விடுதிகளுக்கு நிறம் பூசுதல் மற்றும் தாழ்வாரங்களில் ஒளிரும் பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் இச்சீரமைப்புப் பணிகளில் அடங்கும். மேலும், மருத்துவமனைக்கு அத்தியாவசிய உபகரணங்களையும் வங்கி கையளித்துள்ளது.

டி சொய்சா மகளிர் வைத்தியசாலையில், இத்திட்டத்தின் நிறைவு மற்றும் கையளிக்கும் விழாவில், தலைவர், சுஜீவ ராஜபக்ஷ, பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா மற்றும் மக்கள் வங்கியின் நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.:- GOLDS/LND/05/ACQ/RDA, GOLDS/LND/05/SUR/2022/08

காணி அமைச்சின் குறிப்பு இல.:- 4-3/5/2021/HW/115-A
4-3/5/2021/HW/115
4-3/5/2021/HW/115-B

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.03.22ஆம் திகதிய 2324/24 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : இரத்தினபுரி
பிரதேச செயலாளர் பிரிவு : கொடக்கவெல

| ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| இ.கி.வ. 743/8/8 | 31 | 0.5013 | யஹலெவெல | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 743/9/9 | 76 | 1.3747 | யஹலெவெல | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/15/15 | 151 | 2.0509 | ரக்வானை (பிரிவு) | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/16/16 | 142 | 1.9060 | ரக்வானை | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/17/17 | 178 | 2.7680 | ரக்வானை (பிரிவு) | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/18/18 | 176 | 3.8486 | ரக்வானை (பிரிவு) | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/19/19 | 119 | 3.0320 | ரக்வானை (பிரிவு) | இல. 231, ரக்வானை, வடக்கு |
| இ.கி.வ. 699/20/20 | 148 | 4.9927 | ரக்வானை (பிரிவு) | இல. 231, ரக்வானை, வடக்கு |

**ஜீ.எல்.டப்லிவ்.ஏ. பிரதிபா**
**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,**
**கொடக்கவெல.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கொடக்கவெல.**
**2023.05.02**

டொக்லான் எல்லை விவகாரம்:

# இந்திய நலனுக்கு எதிராக பூட்டான் செயல்படாது

டொக்லான் பீடபூமியை ஒட்டிய சீன – பூட்டான் எல்லையை மீள் நிர்ணயம் செய்ய பூட்டான் தீர்மானித்திருப்பதாக பெல்ஜிய பத்திரிகை ஒன்றுக்கு அந்நாட்டின் பிரதமர் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டிருப்பது இந்தியாவுக்கு பாதகமான ஒரு செய்தி அல்ல என்றும் அதே பேட்டியில் பூட்டான் பிரதமர், டொக்லான் எல்லைப் பிணக்கு தொடர்பான பேச்சுகளில் இந்தியாவுக்கும் பங்குள்ளது என்றும் டொக்லான் விவகாரத்தில் இந்தியாவின் பாதுகாப்பில் பூட்டான் எப்போதுமே கரிசனை கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பூட்டான் பிரதமரின் பேட்டியையடுத்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான 'த குளோபல் டைம்ஸ்', கலாசார மற்றும் மத அடிப்படையில் மட்டுமல்ல சரித்திர ரீதியாகவும் இந்தியாவை விட சீனாவுக்கே பூட்டான் நெருக்கமான நாடாகத் திகழ்கிறது என்றும் டொக்லான் எல்லைப் பிரச்சினையை பூட்டானும் சீனாவும் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக் கொள்ளும் என்றும் மார்ச் 30ஆம் திகதி இதழில் செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தியை முற்றிலும் மறுத்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு, பூட்டானிய அரசியல் சட்டத்தின் தலைவரும் நாட்டு விவகாரங்களில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் படைத்தவருமான பூட்டான் மன்னர் தன் ஏப்ரல் மாத புதுடில்லி விஜயத்தின்போது இந்தியப் பிரதமரை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்தி நெருக்கமாக செயல்படுவது பற்றி ஆராய்ந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

# டொமினிக்கன் தலைநகரில் காந்திஜி சிலை திறப்பு; இந்திய வெளிவிவகார அமைச்சர் திறந்து வைத்தார்

கடந்த மாத இறுதியில் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியன் ஜெய்சங்கர் இரண்டு நாள் பயணமாக டொமினிகன் குடியரசுக்கு சென்றிருந்தார். இரு தரப்பு உறவுகளை மேலும் விருத்தி செய்யும் வகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரண்டாம் நாள் அவர் தலைநகர் சாந்தோ டொமிங்கோ சந்தைப் பகுதியில் மகாத்மா காந்தியின் உருவச் சிலையை திறந்து வைத்தார். ஒரு இந்திய வெளியுறவு அமைச்சின் முதல் டொமினிக்கன் விஜயம் இதுவாகும்.

மிகச் சக்தி வாய்ந்த செய்தியை உலகுக்கு அறிவித்த உலகப் பொது மனிதரான காந்திஜியின் சிலையை நாட்டின் தலைநகரில் திறந்து வைப்பதில் தான் பெருமையடைவதாக தனது உரையில் குறிப்பிட்ட இந்திய அமைச்சர், தற்போது அதிகம் பேசப்படும் காலநிலை நடவடிக்கைகள் மற்றும் காலநிலை நீதி தொடர்பாக, அதே வார்த்தைப் பிரயோகங்களில் இல்லாவிட்டாலும், சூழல் பாதுகாப்பு தொடர்பாக காந்திஜி அன்றே கருத்துகளை கூறியிருந்தார் என்று தெரிவித்ததோடு, காந்திஜி காலத்தைக் கடந்தும் சிந்தித்தவர் எனக் குறிப்பிட்டார்.

National Lotteries Board — 2023.05.02 — www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5104 | ரூ. 15,410,656.00 | L | 7 3 3 1 2 0 |
| தன நிதானய | 1134 | ரூ. 88,572,545.60 | G | 08 34 59 67 |
| ராசி சவ பலய | 413 | ரூ. 2,645,137.80 | | 25 35 36 39 |
| மெகா பவர் | 1452 | ரூ. 318,658,650.00 | H | 13 21 28 38 59 |
| ஜாதிக சம்பத | 1559 | ரூ. 10,507,820.00 | | 9 5 2 5 9 9 |
| கொவிசெத | 3346 | ரூ. 100,714,030.24 | V | 45 71 77 78 |

## வெற்றிட அறிவித்தல்

## இலங்கை காலநிலை நிதியம்

**சுற்றாடல் அமைச்சு**

**உறுதிப்படுத்தல் நிறைவேற்றுநர்/ செயற்றிட்ட நிறைவேற்றுநர்**

**கல்வித் தகைமைகள்:**

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (BSc.), வன சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றுச்சூழல் வியாபார முகாமைத்துவம், பசுமை தொழில்நுட்பம், காலநிலை மாற்றம், இயற்கை வள முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய வேறு பட்டம்.

**தேவையான திறன் மற்றும் அனுபவம்**

- காலநிலை மாற்றத்தின் பின்னணி அறிவு மற்றும் நவீன நிலைத்தன்மை நடைமுறைகள்
- சுற்றாடல் முகாமைத்துவ முறைமை தொடர்பில் ISO மீதான வெளிப்பாடு
- திடமான எழுதும் மற்றும் கதைக்கும் ஆங்கில மொழித்திறன்
- forest biometricsஇல் தொழில்நுட்ப அறிவு மேலதிகத் தகைமையாகும்.

**வயது:** 25 -45 வயதிற்கிடையில்.

**சம்பளம்:** ஆரம்பச் சம்பளம் 27, 500.00+ 7,800.00+5,000.00 ரூபாவாக இருக்கும்.

**வேலைவாய்ப்பு வகை:** ஒப்பந்தம் (செயற்றிறன் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படலாம்)

**ஆரம்ப ஒப்பந்தக் காலப்பகுதி:** 1 வருடம்

ஆர்வமுள்ள அபேட்சகர்கள் முழுமையான சுய விபரத்தை பின்வரும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் / மின்னஞ்சலில் அனுப்ப வேண்டும். (குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்காக தொடர்பு கொள்ளப்படுவர் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்)

விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள்: 2023 மே 19ஆம் திகதி.

**முகவரி: இலங்கை காலநிலை நிதியம், ''சொபாதம்பியச",**
**இல. 416/1/C, றொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல.**
**மின்னஞ்சல்: info@climatefund.lk,/ milanislcf@gmail.com**
**இணையதளம்: www.climatefund.lk**
**தொலைபேசி: 011 2053065**
**கையடக்க தொலைபேசி: 077 9410408**

# கிழக்கின் குரல்



# பல்கலைக்கழகங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பொருளாதாரத்தை முன்னேற்ற உதவ வேண்டும்

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்

(ஒலுவில் விசேட நிருபர்)





நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பல்கலைக்கழகங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டை அபிவிருத்தி பாதைக்கு முன்கொண்டு செல்ல வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

"பலதரப்பட்ட ஆராய்ச்சி மூலம் நிலையான எதிர்காலத்திற்கான சமகால சிக்கல்களை நிர்வகித்தல்" எனும் தொனிப்பொருளில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் 10 ஆவது சர்வதேச ஆய்வரங்கு ஒலுவில் வளாகத்தில் புதன்கிழமை (03) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உபவேந்தர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஆராய்ச்சியாளர்கள் ஒரு குறுகிய வட்டத்துக்குள் ஆராய்ச்சி செய்வதை விடுத்து, வெவ்வேறான துறைகளில் ஒருங்கிணைந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் முன்னிலை வகித்து பல வெளியீடுகளை சர்வதேச ரீதியில் செய்துள்ளது.

நீங்கள் கல்வி ஆராய்ச்சி செய்யும் போது, உங்கள் நோக்கத்தை வரையறுப்பது முக்கியம். ஆராய்ச்சிகளின் நோக்கம் ஆராய்ச்சி செய்வதற்குரிய ஆர்வம் இருக்க வேண்டும்.

ஆராய்ச்சியில் ஈடுபடுவது ஏதாவது ஒரு பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்தோடு இருக்க வேண்டும். தொடர்ச்சியான இலக்கண ஆய்வுகளின் மூலம் ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

எனது துறை சமூக விஞ்ஞானமாக இருந்தபோதிலும் கோவிட் 19 காலப் பகுதியில் இது சம்பந்தமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு, கோவிட்19 தாக்கம் எவ்வாறு சமூகம், பொருளாதாரம், கல்வி, அரசியல் ரீதியிலான தாக்கத்தினை உண்டு பண்ணியது என்பதனை கண்டறிய முடிந்தது.

சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்களை இணைத்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதன் மூலம் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வழிகாட்டல் வழங்க வேண்டுமென்றார்.

இந்தியா தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் என். பஞ்சநாதம் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டார்.

# மாகாண மட்டத்தில் தங்க பதக்கம் பெற்ற மாணவிக்கு கௌரவம்



(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டி நிகழ்ச்சியில், அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவி முதல் நிலை பெற்று தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளார், என கல்லூரியின் அதிபர் ஏ.பி.முஜீன் தெரிவித்தார்.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி மூலப் போட்டியில் பங்குபற்றி தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்த எம்.ஐ.பாத்திமா இப்பத் என்ற மாணவியினைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (03) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, சாதனை மாணவி பதக்கம் அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மாணவியினை வழிப்படுத்திய விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டப்பட்டனர்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியில், இடம் பெற்றது.

ஆங்கில மொழி மூலம் தரம்07 மாணவர்களிடையே நடத்தப்பட்ட இம்மாகாண மட்டப் போட்டியில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவி எம்.ஐ.பாத்திமா இப்பத் 76 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துக் கொண்டார்.

# மூதூர் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில், டெங்கு ஒழிப்புக்கான கண்காணிப்புக்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு செயலணி குழுவினரால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

இந் நடவடிக்கை தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்புக்கான செயலணிக்குழு உத்தியோகத்தர்கள் என வீடு வீடாகச் சென்று இக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை குடியிருப்பு சூழல், நீர் தேங்கி நிற்கும் இடங்கள், கிணறு, மலசலகூடம், பூச்சாடிகள் மற்றும் சுற்றுச்சூழல்கள் என மேற்பார்வை செய்து தேவையான ஆலோசனைகளையும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கி வருவதுடன், தேவையற்ற கழிவுப்பொருட்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131 ஆவது ஜனன தின நிகழ்வு



(மட்டக்களப்பு குறூப், கல்லடி குறூப் நிருபர்கள்)

தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றிய உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 131ஆவது ஜனன தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதான நிகழ்வாக மட்டக்களப்பு கல்லடியில் விபுலானந்த புரத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவாமியின் சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு 'இராம கிருஸ்ண மிசன் தலைவர்' சுவாமி நீலமாதவானந்தஜீ மகராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார். சுவாமி விபுலானந்தா நூற்றாண்டு விழாச் சபை செயலாளர் ச.ஜெயராஜ் சபை தலைவரும் முன்னாள் வலய கல்வி பணிப்பாளருமான கே.பாஸ்கரன், காந்தி சேவா சங்க தலைவர் கலாநிதி ஏ.செல்வேந்திரன் உட்பட பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

விபுலானந்த கீதம் பாடப்பட்டதுடன் விசேட வழிபாடுகளும் சுவாமியின் சமாதியில் இடம் பெற்றன. பெரும் எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

# அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா அபிவிருத்தி நிலையத்தின் முத்து விழா





(வாச்சிக்குடா விசேட நிருபர்)

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா அபிவிருத்தி நிலையத்தின் 30ஆவது ஆண்டு நிறைவின் முத்து விழா கொண்டாட்ட நிகழ்வுகள், இல்லத்தின் ஸ்தாபகர் இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அருளாளர்களாக மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிசன் சுவாமிகள் ஸ்ரீமத் நீலமாதவனானந்த ஜி மகராஜ் மற்றும் தம்பட்டை தபோவன துறவி ஸ்ரீமத் நித்தியானந்தா சுவாமிகள் கலந்து கொண்டதுடன், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையராசன், கௌரவ அதிதிகளாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைகள் திணைக்கள் ஆணையாளர் ஆர். றிஸ்வாணி, விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று கிழக்கு விவசாய திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் சம்சுடீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரார்த்தனை மண்டப திறப்பு விழாவும் விசேட பூஜைகளும் அருளாளர்களால் நடாத்தி வைக்கப்பட்டது. இதன் பின்னராக அதிதிகள் வரவேற்கப்பட்டு தேசிய கொடியேற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இல்ல மாணவர்களால் இல்லகீதம் இசைக்கப்பட்டதுடன் முத்து விழா கையேட்டினை இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை அதிதிகளுக்கு வழங்கி வைத்தார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், சேவை ஆற்றிவரும் அதிதிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

# திருமலையில் மாபெரும் தொழிற் கல்வி சந்தை

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலை வாய்ப்பு பிரிவு, திறன் மற்றும் தொழிற்கல்வி பிரிவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு ஆகியன இணைந்து நடாத்தும் மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தை எதிர்வரும் (09) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என். ஜயவிக்ரம கலந்து கொள்ளவுள்ளார். இங்கு உள்ளூர், வெளியூர் தொழில் தருநர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் மற்றும் 50 இற்கும் மேற்பட்ட அரச, தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இம் மாபெரும் தொழில் மற்றும் தொழிற்கல்வி சந்தையானது இளைஞர், யுவதிகள், தொழில் தேடுபவர்கள், தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பான தகவலை பெற விரும்புவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடை விலகியோர், என அனைவரும் பயன் பெறும் வகையில் நடைபெறவுள்ளது.

# எம்.ஐ.எம்.மொஹிடீன் ஆய்வு நிலையத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



அக்கரைப்பற்றில் இயங்கிவரும் "எம்.ஐ.எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்" அதனது சேவைகளை மேலும் விரிவு படுத்தும் நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையின் ஒரு சிறந்த ஆய்வாளராக, முற்போக்கு சிந்தனையாளராக, எழுத்தாளராக வாழ்ந்து அண்மையில் இறையடிசேர்ந்த அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக்கொண்ட மர்ஹூம் எம்.ஐ எம்.மொஹிடீனை நினைவு கூரும் வகையில், அக்கரைப்பற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந் நிலையத்தை சாதாரண குடிமக்கள் மாத்திரமன்றி ஆய்வாளர்கள், கல்விமான்கள் கூட தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.

சென்றவாரம் நிலையத்தின் ஆளுநர் சபையினர், தென்கிழக்கு பல்கலைக்கழகதிற்கு விஜயம் செய்து நூல் நிலையத்தில் இவருக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரிவை மேலும் விஸ்தரிப்பது மற்றும் வாசகர்ளுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் உரையாடினர்.

ஆளுநர் சபை உறுப்பினர்கள் தமது ஆக்கபூர்வமான கருத்துகளை தெரிவித்தனர். இங்கு பிரசன்னமாயிருந்த அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி சிராஜ் மஷூர், இணைப்பு அதிகாரி எம்.எல்.ரமீஸ் மற்றும் உறுப்பினர்களான எ.எம். ஜௌபார் மற்றும் மௌலவி ரயீஸ் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர்.

அத்தோடு தலைநகரில் கல்விமான்கள், புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் மற்றும் துறை சார் வல்லுனர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் ஆய்வு மகாநாடு ஒன்றை நடாத்தவேண்டுமெனவும், இது தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி சிராஜ் மஷூர் மேற்கொள்ளவுள்ளதாகவும், இதனை மிகவும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# அரச ஊழியர்களின் சம்பளத்தை ரூ. 20,000 ஆல் அதிகரிக்க வேண்டும்

## அரசாங்க பொது சேவைகள் சங்கத்தின் தலைவர்

(சாய்ந்தமருது விசேட, துறைநீலாவணை நிருபர்கள்)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப, அரச ஊழியர்களின் சம்பளத்தை ரூ.20,000 ஆல் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கத்தின் தலைவர் எஸ். லவகுமார் தெரிவித்தார் .

கல்முனை தனியார் விடுதியில் மே தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2000க்கு அமைவாக கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுக்களில் தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஆலோசனைக் குழுக்களை தாபிப்பதன் மூலம் அவற்றின் உற்பத்தி பெருக்கத்தை மேம்படுத்த வேண்டும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான விசேட தர பதவியணியை ஏற்படுத்துவதன் மூலம், அச்சேவையினை வினைத்திறன் மிக்கதாக அரச நிர்வாகத்திற்கு பயனுள்ள வகையில் மாற்றி அமைக்க கோரல் உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டது.



அம்பாறையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை பெய்த கனத்த மழை காரணமாக நகரின் மணிக்கூட்டுக்கோபுரத்தை அண்டிய பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை காணலாம். (படம்.கல்முனை குறூப் நிருபர்)

# மாணவர்களுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம்; மட்டு. மாவட்ட சிவில் சமூக அமைப்பினர் வேண்டுகோள்

(கல்லடி குறூப் நிருபர்)

எதிர்கால தலைவர்களாக மிளிரவிருக்கின்ற மாணவ சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாமென, மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பினர் வேண்டுகோலொன்றை அறிக்கை ஒன்றின் ஊடாக முன்வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் கடிதத் தலைப்பில் அதன் செயலாளரின் கையொப்பத்துடன், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதி தமது கல்வி நடவடிக்கையின் அடுத்த கட்ட இயங்குதலுக்காய் காத்துக் கொண்டிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி, நடந்து முடிந்த உயர்தர பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணி காலதாமதமாகாமல் கையாளுதல் மிகவும் அவசியமானதாகும்.

ஏற்கனவே உயர்தர பரீட்சையும் தாமதித்து நடைபெற்றுள்ள நிலையில், பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை தாமதப்படுத்தல் எமது மாணவ சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைக்கு குந்தகமாய் அமையும் என்பதை எமது அமைப்பு மிக வேதனையோடு தெரிவித்து நிற்கின்றது.

எனவே பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணியோடு தொடர்புபட்ட அனைவரும் எமது இளம் தலைமுறையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகளை துரிதப்படுத்தி மாணவர்களுக்கு உதவி புரியுமாறு அவ் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அல் பாஸிய்யத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில்

# மர்ஹூமா எம்.என் ஸீனத் நைமாஅமீன் ஞாபகார்த்த கணினி பயிற்சிக் கூடம் திறப்பு









பேருவளையில் அராபியர் முதன் முதலில் காலடி எடுத்து வைத்த வரலாற்று பிரசித்தி பெற்ற நகரமாகும். 1100 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் அழகிய தோற்றத்துடன் கம்பீரமாக பேருவளை மருதானையில் காட்சியளிக்கிறது. அதேபோல் இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியும் மருதானை மண்ணின் அமையப் பெற்றுள்ளது. அல் பாஸிய்யத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கும் இப் பாடசாலை முன்னேற்றப் பாதையில் வீறு நடைபோடுகிறது. சிறந்த பரீட்சைப் பெறுபேறு உட்பட ஏனைய துறைகளில் இப் பாடசாலை பல்வேறு சாதனைகள் நிலைநாட்டி பேருவளை மண்ணுக்கு புகழ் சேர்த்துள்ளது.

அரசாங்கத்தினதும், பிரதேச பரோபகாரிகள், தனவந்தர்களின் பங்களிப்போடு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இப் பாடசாலைக்கு அவ்வப்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த வகையில் இப் பாடசாலையில் நீண்டகாலம் பணிபுரிந்து சேவையில் இருந்த சமயம் இறையடி சேர்ந்த மர்ஹூமா எம்.என் ஸீனத் நைமா அமீன் (ஆசிரியை) ஞாபகார்த்த கணினி பயிற்சி கூடமொன்று அமைக்கப்பட்டு கடந்த 28.04.2023 திறந்து வைக்கப்பட்டது.மர்ஹூம்களான முஹம்மது நயீம் சித்தி பாதிமா தம்பதிகளின் புதல்வியான மர்ஹூமா எம்.என் ஸீனத் நைமாஅமீன் (ஆசிரியரை) யின் ஞாபகார்த்தமாக அவரின் கணவர் அல்ஹாஜ் ஏ.ஐ.எம்.ஜீ அமீன்,பிள்ளைகளான இஜாஸ் பக்ஹி, அல்ஹாஜ் பரூஜ் அமீன்,எம்,ஜீ.ஏ,எம் பஸ்ரி அமீன்,எம்,ஜீ.ஏ, எம் பிராஸ் அமீன், எம்,ஜீ.ஏ, எம் பர்ஹத் அமீன், எம், ஜீ.ஏ, எம் பத்ஹி அமீன், எம், ஜீ.ஏ பாத்திமா ஆயிஷா ஆகியோரின் நிதி உதவியுடன் 35 இலட்சம் ரூபா செலவில் இந்த கணினிகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதன் திறப்பு விழா அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மௌலவி மொஹம்மத் ரஸ்மிஆலிம் துஆப் பிரார்த்தனை நடாத்தினார்.

**இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பீ உரையாற்றிய போது,...**

பேருவளை பகுதி மாணவர்களின் அறிவுக் கண்களை திறக்க மர்ஹூமா ஸீனத் நைமாஅமீன் ஆசிரியை கடந்த மூன்று தசாப்த காலமாக ஆற்றிய தியாகமிகு பணிகள் மகத்தானதாகும்.

அவரது ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் அங்கசம்பூரண கணினி கூடமொன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர். இது ஒரு முன்மாதிரியான பணியாகும். கணினி கூடத்தை அமைத்துக் கொடுத்தது மட்டுமல்லாமல் பயிற்சி ஆசிரியர் மற்றும் அதன் பராமரிப்பினையும் குடும்பத்தினர் பொறுப்பேற்க முன்வந்துள்ளனர்.இதனை பாராட்ட வேண்டும்.

இவ்வாறான கல்விப் பணிகளை வசதிபடைத்த பரோபகாரிகள் இறையடி சேர்ந்த தமது குடும்ப உறுப்பினர்களின் ஞாபகார்த்தமாக மேற்கொள்ள வேண்டும். நாம் கல்விக்காக முதலீடு செய்யும் பணம் ஒருபோதும் வீணாகாது.

நவீன விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் முஸ்லிம் சமூகம் உன்னத நிலையை அடைய வேண்டும். இத்துறைககளின் உச்ச பயன்பாட்டின் மூலமே எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வியை சிறப்பாக பெற்றுக் கொடுப்பதன் மூலம் தகவல் தொழில் நுட்பதுறையில் துறைசார் நிபுணர்களை உருவாக்க வாய்ப்பு கிட்டுகிறது.

எமது மாணவச் செல்வங்களிடம் சிறந்த சிந்தனை, திறமை,ஆற்றல்கள் இருப்பதை நாங்கள் காண்கின்றோம். அவர்களுக்கு சிறந்த கல்வி,வழிகாட்டல் மற்றும் சிறந்த பயிற்சி வழங்குவதன் மூலம் அவர்களை துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களாக உருவாக்க முடியும். வைத்தியர்கள்,பொறியியலாளர்கள்,சட்டத்தரணிகள் போன்றே நிருவாக சேவை,சிவில் சேவை,தகவல் தொழில் நுட்பதுறைகளில் மேலும் துறைசார் நிபுணர்கள் முஸ்லிம் சமூகத்திலிருந்து உருவாக வேண்டும்.கல்வி கற்போருக்கு வசதிபடைத்த தனவந்தர்கள் உதவி செய்ய வேண்டும். கல்வி என்றும் அழியாத செல்வமாகும். பேருவளை அப்ரார் கல்வி அபிவிருத்தி நிலையம் இப் பிரதேச வறிய மாணவர்களுக்காக புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது. இதன் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க உத்தேசித்துள்ளோம். இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான இப் பாடசாலை சமூகத்திற்கு பல புத்திஜீவிகளை உருவாக்கித் தந்துள்ளது. கல்வி உட்பட ஏனைய துறைகளில் இப்பாடசாலை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகிறது. சிறந்த ஆளுமையுள்ள அதிபரின் சிறந்த நிர்வாகத்தின் கீழ் சிறந்த பரீட்சை பெறுபேறுகளுடன் முன்னணி மகளிர் பாடசாலையாக திகழ்கிறது. எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும். மருதானையை சேர்ந்த மர்ஹூம் நயீம் ஹாஜியார் ,பாக்கீர் மாக்கார் குடும்பங்களுக்கிடையிலான உறவு நீண்ட காலமாக இருந்து வருகிறது என்றார்.

**பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜீ.ஜீ.எம் முதிதா...**
**களுத்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)**

அரசாங்கம் கல்வித் திணைக்களம் செய்ய வேண்டிய ஒரு சேவையை இப் பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றிக் கொண்டிருந்த நிலையில் மறைந்த ஆசிரியையின் ஞாபகார்த்தமாக அங்க சம்பூர்ண கணினி பயிற்சி கூட மொன்றை குடும்ப அங்கத்தவர்கள் அமைத்துக் கொடுத்துள்ளனர்.இதையிட்டு நன்றி தெரிவிக்கின்றேன். சிறந்த ஒரு அதிபரின் கீழ் இப் பாடசாலை சிறப்பாக இயங்குவதையும் பாராட்டுகிறேன் என்றார்.

**முன்னாள் பிரதி அதிபர் பாயிஸா ஜாபிர்**

மர்ஹூமா என்.எம் ஸீனத் நைமாஅமீன் ஆசிரியை சுமார் 30 வருடங்களாக ஆசிரியர் பணியை திருப்தியான முறையில் செய்தார். அவர் ஆற்றிய பணிகளை ஒரு போதும் மறக்க முடியாது. தனது ஊர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தியாகத்துடன் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றி அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றார். ஆசிரியர் சேவையில் இருக்கும் சமயத்தில் இறையடி சேர்த்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவர் ஆற்றிய பணிகளை அல்லாஹ் அங்கீகரிக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம் என்றார்.

**அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையுரையில்**

பாடசாலையின் முக்கிய குறைபாடுகள் தேவைகள் பற்றி எடுத்துக் கூறினார். பாடசாலையின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் தமது பாடசாலை மாணவர்கள் பெற்ற சாதனைகளை ஞாபக மூட்டினார்.களுத்துறை கல்வி வலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த ஒரே ஒரு மக்கள் பிரதிநிதி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மாத்திரமே என்றும் அதிபர் தனது உரையில் சுட்டிக் காட்டினார். ஆசிரியர் நியமனம் வழங்கும் போது எமது பாடசாலைக்கும் தேவையான ஆசிரியர்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.மர்ஹூமா எம்.என் ஸீனத் நைமாஅமீன் ஆசிரியை அவர்களின் உயர்ந்த பணிகளை அதிபர் பாராட்டிப் பேசினார்.

மர்ஹூமா எம்.என் ஸீனத் நைமாஅமீன் ஆசிரியை அவர்களின் புதல்வர் அல்ஹாஜ் பரூஜ் அமீன்,பாடசாலை ஆசிரியர் எம்.எச்.எம் இஹ்ஸான் உட்பட பலரும் இங்கு உரை நிகழ்த்தினர். இவ் வைபவத்தில் பேருவளை நகரசபை முன்னாள் உறுப்பினர் தில்ஷாத் அன்வர், அல்ஹாஜ் ஏ.ஐ.எம்.ஜீ அமீன், இரத்தினக்கல் வர்த்தகர் அல்ஹாஜ் நபாத் நயீம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயளாலர் அல்ஹாஜ் மொஹம்மத் பாஹிம் ஸியாத்,உறுப்பினர்களான மொஹம்மத் ரிஸ்கான் அப்துல் ஹமீத் ,மொஹம்மத் இல்ஹாம் முஸம்மில்,மொஹம்மத் ரிஸ்மி பக்கிர்,மொஹம்மத் இம்ரான் நஸீர் ,மொஹம்மத் ரைஸ் ரியால் உட்பட பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள்,பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பேருவளை பீ.எம் முக்தார்





































# கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்மாவட்டச் செயலகத்தில் நேற்று புதன்கிழமை (03) நடைபெற்ற போது கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், செ.கஜேந்திரன், கிளிநொச்சி மாவட்ட

அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளினால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், புதிய முன்மொழிவுகளுக்கான அனுமதிகளும் பெறப்பட்டன.

அத்துடன், கிளிநொச்சியில் போதைப்பொருள் பாவனை உட்பட சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக விசேட திட்டங்களை வகுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## வடக்கின் உதயம்

# பத்திரிகை சுதந்திர தினமான நேற்று யாழ். ஊடக அமையம் ஆர்ப்பாட்டம்




யாழ். விசேட நிருபர்

உலக பத்திரிகை சுதந்திர தினமான நேற்று புதன்கிழமை (03) ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ். ஊடக அமையத்தினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்றலில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# நானாட்டான் நிலக்கடலை அறுவடை நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பங்கேற்பு

மன்னார் குறூப் நிருபர்





மன்னார், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இசைமாளத்தாழ்வுக் கிராமத்தில், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் பங்கேற்புடன் நிலக்கடலை அறுவடை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) மேற்கொள்ளப்பட்டது.

அறுவடையில் கிடைத்த நிலக்கடலைகளை உரிய முறையில் பதப்படுத்தி எடுக்கும் இயந்திரமொன்றை கமக்கார அமைப்புகளிடம், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இதன்போது கையளித்தார்.

விவசாயச் செய்கையை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ள குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கமைய, ILO நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பொதுமக்கள், தனியார் கூட்டு உற்பத்தித் திட்டத்தின் கீழ், இசைமாளத்தாழ்வுக் கிராமத்தில் நிலக்கடலை செய்கை பண்ணப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்டான்லி டிமெல், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகீலா பானு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கண்காட்சி





யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித மன்றத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணக் கண்காட்சி அக்கலாசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது.

ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரணதரம் வரை கணித பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய கற்றல் உபகரணங்களை ஆசிரிய மாணவர்கள் உருவாக்கி காட்சிப்படுத்தினர்.

கோப்பாய் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி அருணாசலம் குகன் கலந்துகொண்டார்.

இதன்போது கணித மன்றக் காப்பாளர், விரிவுரையாளர் இ.இராஜபாலன் வாழ்த்துரை வழங்கினார்.

## மலைச்சாரல்

# கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியில் கண்காட்சி

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் பங்கேற்பு



நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியின் 20ஆவது ஆண்டு பூர்த்தியையிட்டு 'மெய்நிகர்' எனும் தொனிப்பொருளின் கீழ் நவீன தொழில்நுட்ப கண்காட்சியை நேற்று புதன்கிழமை (03) நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இரு நாட்கள் நடைபெறுகின்ற இந்தக் கண்காட்சியானது, நவீன காலத்திற்கேற்ப தமது வாழ்க்கை மற்றும் இதர செயற்பாடுகளை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது.

கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்ததுடன், மாணவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நவீன உலகை வெல்வதற்காக நவீன தொழில்நுட்பம் சார்ந்த தமது திறமைகளை மேலும் வெளிப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு மாணவர்கள் செல்ல வேண்டும் எனவும், அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

# கேகாலையில் யானை தாக்கியதில் ஒருவர் காயம்

அக்குறணை குறூப் நிருபர்

வளர்ப்பு யானைக்கு பழங்களை வழங்குவதற்கு முற்பட்ட ஒருவரை அந்த யானை தாக்கிய சம்பவம், கேகாலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்றதுடன், இதில் காயமடைந்தவர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். 63 வயதுடைய சாரதி ஒருவரே யானையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். கேகாலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது 12 வயதுடைய வளர்ப்பு யானையே இந்த நபரைத் தாக்கியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மற்றுமொருவரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பலாங்கொடையில் வைரஸ் பரவல்; முகக்கவசம் அணிய அறிவுறுத்தல்!

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

தற்போது இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேசத்தில் ஒருவகை வைரஸ் நோய் பரவி வருவதாக சுகாதாரத் தரப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகக்கவசங்களை அணியுமாறு, பொதுமக்களுக்கு அப்பிரதேச வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்த நோய் பரவிய ஒருவரிடம் தொடர்ந்து 10 நாட்கள் இந்த நோயின் தாக்கம் இருப்பதாகவும் ஆகவே, பொதுமக்கள் அனைவரும் அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும், வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது இந்த நோய்க்குரிய அடையாளங்கள் உணரப்பட்டவர்கள் மிக முக்கியமாக முகக்கவசத்தை அணிந்தவாறு வீட்டிலிருந்து வெளியேற வேண்டுமெனவும், வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.



இந்த நோயினால் ஒருவர் பாதிக்கப்படும் பட்சத்தில் உடனடியாக அரசாங்க வைத்தியசாலைகளிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களிடமோ வைத்திய உதவியை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், வைத்தியர்கள் தெரிவித்தனர்.



அறநாயக்க திப்பிட்டிய மஜ்மஉல் ஹைறாத் அஹதிய்யா பாடசாலை நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், நோன்புப் பெருநாளையிட்டு விளையாட்டுப் போட்டி திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. அப்பாடசாலை அதிபர், மௌலவி எம்.எச். எம்.நிஸாமின் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் வில்பொல ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் பர்ஹான் உமர் உட்பட நிர்வாக அங்கத்தவர்கள், அஹதிய்யா மாணவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

# பசறை – நமுனுகுலை வீதியில் சரிந்து வீழ்ந்த பாரிய மண்மேடு!

மடுல்சீமை நிருபர்



பசறை பிரதேசத்தில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து, பசறை – நமுனுகுலை பிரதான வீதியில் நேற்று பாரிய மண்மேடு சரிந்து விழுந்ததில், இந்த வீதி வழியான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக, நமுனுகுலை பொலிஸார் தெரிவித்தனர். பசறை தொடக்கம் நமுனுகுலை, பண்டாரவளை வரை இந்த வீதியின் வழியாகவே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்த மண்சரிவு காரணமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமத்தை எதிர்நோக்கியதாக, அவர்கள் தெரிவித்தனர்.

# கண்டியில் மாணவர்களிடம் பணம் பறிக்க முற்பட்டவர் கைது

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் பாடசாலை மாணவர்களை மிரட்டி பணம் பறிக்க முற்பட்ட 24 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தம்மிடம் சந்தேகநபர் பணம் பறிக்க முற்பட்டமை தொடர்பாக சுற்றுலா பொலிஸாரிடம் மாணவர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்களிடம் தானொரு இராணுவ அதிகாரியென சந்தேகநபர் கூறியதுடன், அவர்களை மிரட்டி இந்தச் சந்தேகநபர் பணம் பறிக்க முற்பட்டமை தொடர்பாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.


சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக வகுப்புக்கு வரும் பாடசாலை மாணவர்களை சந்தேகநபர் மிரட்டி ஏற்கெனவே பணம் பறித்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



இவ்வாறு திருடிய பணத்தை சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு செலவிட்டு வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# நானுஓயாவில் காலாவதியான 200 Kg கோதுமைமா மீட்பு

நானுஓயா எடின்பரோ தோட்டத்தில் காலாவதியான 200 கிலோகிராம் கோதுமை மாவை நானுஓயா சுகாதாரப் பரிசோதகர்கள் அண்மையில் மீட்டுள்ளனர். இது தொடர்பாக நானுஓயா பொலிஸாருக்கும் நானுஓயா சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை நடத்தி களஞ்சியசாலையொன்றிலிருந்து இந்தக் கோதுமை மாவை சுகாதாரப் பரிசோதகர்கள் மீட்டுள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட கோதுமை மாவில் துர்நாற்றம் வீசுவதாகவும், சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்திய பின்னர், உரிய நடவடிக்கையை எடுக்க இருப்பதாக, நானுஓயா சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.



# நீரிறைக்கும் இயந்திரங்களுடன் ஒருவர் கைது!

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை, போம்புவ பிரதேசத்தில் நீரிறைக்கும் இயந்திரங்களை திருடிய ஒருவரை அண்மையில் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இவரிடமிருந்து 4 நீரிறைக்கும் இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

வீடுகளிலிருந்து நீரிறைக்கும் இயந்திரங்களை திருடியதாகவும் இவற்றின் பெறுமதி சுமார் 3 இலட்சம் ரூபாவெனவும், பொலிஸார் தெரிவித்தனர். தமது நீரிறைக்கும் இயந்திரங்கள் காணாமல் போனதாக அவற்றின் உரிமையாளர்கள் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். விசாரணை நடத்தி சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## 2024ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்

## கொபெய்கனே பிரதேச சபை

1987 இல 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண ஆளுநரான திரு. ராஜா கொல்லுரே அவர்களால் 2020.10.29ம் திகதி மற்றும் இலக்கம் 2199/15 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானி (அதி விசேடம்) இல் பிரசுரிக்கத் திட்டமிடப்பட்டிருந்த பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதி இல. 6 இன் பிரகாரம் கொபெய்கனே பிரதேச சபையின் செயலாளரான என்னால் 2024ஆம் ஆண்டிற் வரவு செலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன். உங்களது 2024ம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகள் 2023 ஜுன் 30ஆம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்,
கொபெய்கனே பிரதேச சபை

**2023.05.03ம் திகதி**
**கொபெய்கனே பிரதேச சபை**

## பொது மக்களிடமிருந்து அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

## படல்கும்புற பிரதேச சபை

2024 ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடல்களை உள்ளடக்குவதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களிடமிருந்து அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு படல்கும்புற பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் அதனோடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் 2023 ஜுன் 30ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் சபை செயலாளர் படல்கும்புற பிரதேச சபை, படல்கும்புற என்ற முகவரிக்கு அனுப்புமாறு பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

**சபை செயலாளர்**
**பிரதேச சபை**
**படல்கும்புற**
**055-2250175**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**இல. 606B, சிறி சுமணதிஸ்ஸ மாவத்தை, நவகமுவ, ரணால என்ற முகவரியில் அமைந்துள்ள 'சின்தெசி' நிறுவனத்தாரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட அதே முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2021.04.01ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2222ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2021 மார்ச் 17ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.06.01ஆந் திகதி காலை 10.00மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈட்டு முறி இலக்கம் 1648இல் விபரிக்கப்பட்டுள்ளபடி மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் பல்லே பட்டு, கடுவெலை பிரதேச சபைப் பிரிவிலுள்ள நவகமுவ கிராமத்தில் அமைந்துள்ள "கொஸ்ஹேன மற்றும் கொஸ்ஹேனவத்த" என அறியப்படுகின்ற காணிகளும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. டீ. டி. டப்ளியூ. பீ .பெரேரா தயாரித்த 24.08.1978 திகதிய வரைபடம் இலக்கம் 384இல் அடையாளப்படுத்தப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டு A வடக்கில் ஒருவலை தொடக்கம் நவகமுவை வரையிலான பிரதேச சபை வீதி, அதே வரைபடத்தின் $A^1$ மற்றும் $A^2$ பகுதிகள், TP234249 இலுள்ள ஜி. இலோசிங்ஙோ மற்றும் ஏனையவர்களது அதே காணியின் ஒரு பகுதி, TP 234249 இலுள்ள ஆர். அந்தோனிஸ் பெர்னாண்டோவின் அதே காணியின் பகுதியும் கொர்னேலிஸ் பெர்னாண்டோவின் காணியும் கிழக்கில் TP 183224 இல் யக்தெனியகே யசோஹாமியின் அதே வரைபடத்தின் $A^2$ பகுதியும், TP 153662 இல் மீரியகொல்லவின் வயல் நிலமும், கொர்னேலிஸ் பெர்னாண்டோ மற்றும் ஏனையவர்களின் வயல் நிலங்களும் தெற்கில் கொர்னேலிஸ் பெர்னாண்டோ, ஏனையவர்களது வயல் நிலமும், கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமை கோருகின்ற வயல் நிலமும், மேற்கில் அதே காணியின் துண்டு $A^1$ மற்றும் கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமை கோருகின்ற வயலுடன் ஒன்பது ஏக்கர்கள் இரண்டு றூட்கள் ஆறு தசம் பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ9. றூ2. பே.6.0) விஸ்தீரணத்துடன் வரைபட இல.384 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அக்காணியிலுள்ள கட்டடம் மற்றும் அதிலுள்ள அனைத்தும் Volume/Folio G 1669/41இன் கீழ் ஹோமாகம காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட காணித் துண்டானது உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எம் ஜலாலுதீன் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 13.07.2006 ஆந் திகதிய இல.2587 அண்மைய நில அளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு நவகமுவ கிராமத்தில் அமைந்துள்ள "கொஸ்ஹேன மற்றும் கொஸ்ஹேனவத்த" என அழைக்கப்படும் காணி வரைபடம் இல.2587 அடையாளப்படுத்தப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டு 1 வடக்கில் வரைபடம் இல.384 உள்ள பகுதி $A^2$ வீதி, ஜீ. இலோசிங்ஙோவும், ஏனையவர்களும், வை. யசோஹாமி, ஆர்.குணேரிஸ் மற்றும் ஏனையவர்களும் மற்றும் ஆர். சோமபாலவும் உரிமை கோருகின்ற காணிகள், கிழக்கில் வரைபட இல.384 உள்ள $A^2$ மற்றும் ஜீ.இலோசிங்ஙோ மற்றும் ஏனையவர்களும், வை. யசோஹமி, ஆர்.குணேரிஸ் மற்றும் ஏனையவர்களும் மற்றும் ஆர். சோமபாலவும் உரிமைகோருகின்ற காணிகள், மீரியகொல்ல, கொர்னேலிஸ் பெர்னாண்டோ மற்றும் ஏனையவர்களும் உரிமை கோருகின்ற வயல் நிலங்களும், கால்வாயும் தெற்கில் மீரியகொல்ல, கொர்னேலிஸ் பெர்னாண்டோ மற்றும் ஏனையவர்களும் மற்றும் கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமைகோருகின்ற கால்வாயும், வயல் நிலங்களும், வரைபட இல.384 உள்ள பகுதி $A^1$ மேற்கில் கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமைகோருகின்ற கால்வாய், வயல் நிலங்களும் மற்றும் வரைபட இல.384 உள்ள பகுதி $A^1$ உடன் ஒன்பது ஏக்கர்கள் ஒரு றூட் பதினேழு தசம் பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ9. றூ1. பே.17.0) விஸ்தீரணமும் வரைபட இல.2587 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அக்காணியிலுள்ள கட்டடம் மற்றும் அங்குள்ள அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியிலும் வளாகத்திலும் இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஆதனங்களும், இயந்திரங்களும்:-

**1. CNC MACHINE**

| Assets Description | Serial Number/ Model No | Capitalised Cost |
|---|---|---|
| CNC Vertical Machine Center | Model - V 1000. | 58,000.00 |
| CNC Vertical Machine Center | Model - V 1000. | 58,000.00 |
| CNC Vertical Machine Center (Fright charges) | Model - V 1000. | 2,153.72 |
| PALChgs. (CNC Vertical Machine Center) | Model - V 1000. | 2,999.01 |
| CNC Vertical Machine Center Model - V1000 With MX5 Controller Cooling System. | Model - V 1000 | 59,000.00 |
| CNC Vertical Machine Center Model - V1000 With MX5 Controller Cooling System | Model - V 1000 | 59,000.00 |

**2. LAMINATION MACHINE**

| | TGHU | |
|---|---|---|
| Fabric Laminating Machine. | 4701602 | 560,774.54 |
| Rollers for lamination Machine. | - | 32,829.94 |
| Rollers for lamination Machine. | - | 32,829.94 |

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் அதன் வளாகத்தில் இணைக்கப்பட்டுள்ள தற்போதைய விவரணமும், ஒவ்வொரு வகையினது அனைத்தும்.

ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் அறவிடல் தொகுதிப் பிரிவில் பார்வையிட முடியும். தொலைபேசி இல. 011 238 6073 / 011 220 3412.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
டி.கே.எஸ்.என். குணவர்தன
நிறுவன அறவீட்டுப் பிரிவு
இலங்கை வங்கி,
பிரதான முகாமையாளர்
"இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC
தேசத்தின் வங்கியாளர்

# பெறுகை அறிவித்தல்

## வளிமண்டலவியல் திணைக்களம்

2023 ஆண்டிற்காக எமது திணைக்களத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பற்றரி வகைகளின் பெறுகை சார்பாக 2023 மே 08ம் திகதி மு.ப.9.00 முதல் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

04/2023 - தன்னியக்க மழை அளவைமானி மற்றும் காலநிலை அமைப்பிற்கான பற்றரி வழங்குதல்

| # | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | 12V/65Ah Battery | 40 |
| 02 | 12V/42Ah Battery | 80 |

பெறுகை ஆவணங்களை 2023 மே 08 முதல் 2023 மே 29 வரை வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ.1500.00 கட்டணத்தை செலுத்தி வளிமண்டலவியல் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

2023 மே 30 பி.ப.2.00 இற்கு கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் திறக்கப்படும்.

இதுபற்றி மேலதிக தகவல்களை 011-2684045 தொ.பே. இலக்கம் ஊடாக திணைக்களத்தின் பெறுகைப் பிரிவை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**வளிமண்டளவியல் திணைக்களம்**
**பௌத்தாலோக்க மாவத்தை**
**கொழும்பு - 07**
**2023.05.04**

LANKA SATHOSA லங்கா சதொச

## பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடட்டுக்கு 19 லீற்றர் குடிநீர் போத்தல்களை வழங்கல்

விலைமனு இலக்கம்: LSL/PRO/05/18/19L WaterBottles/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்

**லங்கா சதொச லிமிடட்** தலைமை அலுவலகத்திற்கு, தேர்வு செய்யப்பட்ட விற்பனையகம் மற்றும் விநியோகக் களஞ்சியங்களுக்கு ஓர் ஆண்டு காலத்திற்கு தேவையான 19 லீற்றர் குடிநீர் போத்தல்களை வழங்க முடியுமான உள்நாட்டு வழங்குனர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவைகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான விலைமனு ஆவணத்தை **ரூபா 5,000.00** மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி **2023 மே மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 2023 மே மாதம் 25 ஆம் திகதி வரையான காலத்தில்** கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச லிமிடட்,**
**பெறுகைப் பிரிவு. 3ஆவது மாடி,**
**இல. 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி. கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 மே மாதம் 16 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கும் விலைமனுக்கள், **2023 மே மாதம் 25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர்** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்குள் இட வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/18/19L Water Bottles/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களினாலும் இலங்கைக்குள் செயற்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வெளியிடப்பட்ட நிபந்தனையற்ற **ரூபா 140,000.00 பெறுமதியான விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 மே மாதம் 25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்,
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (திலினி) – 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிடட் பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

# பெறுகை அறிவித்தல்

## அம்பாறை பொது வைத்தியசாலை

## உணவக சேவையை நடாத்திச் செல்லல் - 2023

2023 ஆம் ஆண்டிற்காக அம்பாறை பொது வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக தகைமையான பெறுகையாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு தகைமையுள்ள பெறுகைதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரல்

2023.05.07 -2023.05.22 வரை மு.ப.8.30 - பி.ப.3.00 வரையான காலத்திற்குள் வார நாட்களில் மீளளிக்கப்படாத ரூ.2500.00 தொகை மற்றும் மீளளிக்கப்படும் ரூ.9000.00 தொகையை அம்பாறை பொது வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி, சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டின் பிரகாரம் பெறுகை ஆவணங்களை அம்பாறை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

01. பெறுகை விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அம்பாறை பொது வைத்தியசாலையின் உணவகத்திற்காக 2023 ஆம் ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல், என்று குறிப்பிட்டு 2023.05.23 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர், பொது வைத்தயிசாலை, அம்பாறை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அம்பாறை பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
02. பெறுகை ஆவணங்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறைகளில் இட்டு சமாப்பித்தல் வேண்டும்.
03. பெறுகை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், பெறுகையாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு அவ் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
04. பெறுகை ஆவணங்களை கட்டணங்கள் இன்றியே அம்பாறை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவிரிவில் பரீட்சிக்க முடியும்.
05. அரச பெறுகை நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு பெறுகை பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது அத்துடன் ஏதேனும் காரணத்தினால் கேள்விகள் சமர்ப்பித்த பின்னர் அதுபற்றி தெரியவரின் அக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. குறித்த பெறுகையை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.
07. மேலதிக விபரங்களுக்கு அம்பாறை பொது வைத்தியசாலையின் வைத்தியசாலை செயலாளரை அழையுங்கள் (தொலைபேசி இலக்கம் : 0632223317)

**மருத்துவர் உபுல் விஜேநாயக்க**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை,**
**அம்பாறை**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
(ROAD DEVELOPMENT AUTHORITY – RDA)

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| | ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கங்கள் |
|---|---|---|
| அதிவேக நெடுஞ்சாலை இயக்கங்கள், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவிற்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | பயணிகள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் - 2 ஒப்பந்தங்கள் | RDA/EOM&M/PRC/2023/MECH/10 |
| | | RDA/EOM&M/PRC/2023/MECH/11 |
| | பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் - 3 ஒப்பந்தங்கள் | RDA/EOM&M/PRC/2023/MNT/01 |
| | | RDA/EOM&M/PRC/2023/MNT/04 |
| | | RDA/EOM&M/PRC/2023/MNT/05 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள ஒப்பந்தங்களுக்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.05.04 ஆம் திகதியிலிருந்து 2023.05.18 ஆம் திகதி வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

**மக்கள் வங்கி - பிராந்திய தலைமைக் காரியாலயம், அநுராதபுரம்**

மக்கள் வங்கி அநுராதபுர பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள தேதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வரும் தேதிகள் மற்றும் இடங்களில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

**ஒவ்வொரு நாளும் ஏல விற்பனையானது காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் தேதி | 20.05.2023 | 21.05.2023 | 27.05.2023 | 28.05.2023 |
| இந்த தேதி வரை மீட்கப்படாத புதுப்பிக்கப் படாத நகைகள் | 19.05.2023 | 19.05.2023 | 26.05.2023 | 26.05.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | அநுராதபுரம் | கெக்கிராவ | அநு/நுவரவெவ | மதவாச்சி |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | அநுராதபுரம், தம்புத்தேகம | கெக்கிராவ கல்கிரியாகம, கலென்பி டுனுவெவ, கல்னேவ | அநு/நுவரவெவ, எப்பாவல நொச்சியாகம, தலாவ, மீகலேவா | மதவாச்சி, கஹடகஸ் திகிலிய, ஹொரோவ் பொத்தான்,பதவியா, கெபிதிகொல்லாவ |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | அநுராதபுரம், ரபீவ, நச்சதுவ, தம்சோபுர, ரஜின, ஹந்திய, ராஜங்கனய | கணேவல் பொல, மரதன்கடவல, புல்னேவ | வில்லாச்சிய, திறப்பனே, மிஹிந்தலே, சாலியவெவ | புதவி - பராக்கிரமபுர பதவி - ஸ்ரீபுர |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அநுராதபுரம்**
**தொலைபேசி இல. 025-2223035 / 025-2234870**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

## வெறிநோயை கட்டுப்படுத்துவதற்காக கைகளை இணைப்போம்
## ஆரோக்கியமானதொரு மேல் மாகாணத்தை நோக்கி

# பெறுகை அறிவித்தல்
# நாய்களை மலடாக்கல் – 2023

**சுகாதார திணைக்களம் - மேல் மாகாணம்**

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நாய்களின் பிறப்பை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நாய்களை மலடாக்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகம்,(மேல் மாகாணம்), மாளிகாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேல் மாகாண, சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரடியாகவே சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே கேள்விகள் திறக்கப்படும்.

2023.05.24 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 500 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான 7500 ரூபாவையும் செலுத்தி இந்த அலுவலக சிறாப்பரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து வேலை நாட்களில் இந்த அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து தேவைப்படுத்தப்படும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை கையேற்றுக் கொள்ளலாம்.

**பின்வரும் நிபந்தனைகள் பிரயோகப்படுத்தப்படும்.**

- தகைமையுள்ள கால்நடை மருத்துவர் ஒருவரினாலேயே சத்திரசிகிச்சை நடாத்தப்படல் வேண்டும்.
- ஒரு மாவட்டத்திற்கு மாத்திரமே பெண் நாய்களை மலடாக்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட அணிக்கு கேள்வி வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது அதற்கமைவாக தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.
- இக்கேள்வியின் இறுதி தீர்மானத்தை மேற்கொள்வதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
- மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளல் வேண்டும். 011-2434660/ 011-2437155.

**மருத்துவ கலாநிதி தம்மிக்க ஜயலத்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் (மே.மா.),**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**




## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 31/01/2023 | 02/03/2023 | 22-23-24 /05/2023 & 29/05/2023 |

**கிளைகள் :** அநுராதபுரம்,
அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/AC/8/5/16
காணி அமைச்சின் குறிப்பு இல.:- 4-3/06/2018/HW/411

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.02.20ஆம் திகதிய 2320124 இலக்க அரசாங்க வர்த்தமான பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கெஸ்பேவ |
| கிராம நிலதாரி பிரிவு | : இல. 574பீ, விஷ்வகலாவ |
| அமைவிடம் | : பல்லேபத்துவ |
| வரைபட இலக்கம் | : கடத்திரல் வரைபட இல. 521202, தொகுதி இல. 01, தாள் இல. 12 |
| துண்டு இலக்கம் | : 189-193 (துண்டுகள் 03) (189, 192, 193) |
| விஸ்தீரணம் | : 0.0023 ஹெக்டயார் |

**கே.பி. பிரேமதாச**
**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,**
**கெஸ்பேவ.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கெஸ்பேவ.**
**2023.04.26**

## கேள்வி கோரல் அழைப்பு – அரனாயக்க பிரதேச சபை

ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள மானியங்களின் கீழ் அரனாயக்க பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தினை செயற்படுத்துவதற்காக திறன் உடைய மற்றும் தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | வேலைகள் | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா | தகைமை பெறும் ஒப்பந்த பதிவுத் தரம் | மதிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 1. | அரம முச்சந்தியில் இருந்து அசுபினிஎல்ல நீர் மின்சார நிலையம் வரையான பாதையை மேம்படுத்தல் (0+000 - 1+575 கி.மீ) | ARPS/DE/05/ WS 02 (2023) | ரூ. 15000.00 | C4 மற்றும் அதற்கு மேல் | 52.65 |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை (NCB) மூலம் இக்கேள்வி கோரல் நடத்தப்படும்.

03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாதவராக இருப்பதுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தரத்தில் வீதி நிர்மாணத் துறையில் நிர்மாண அபிவிருத்தி அதிகார சபின் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.

04. சகல கேள்விதாரர்களுக்கும் குறித்த பாதையை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுவதுடன் 2023.05.04 முதல் 2023.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பாதையைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. ஆர்வம் காட்டுகின்ற திறன்உடைய கேள்விதாரர்களால் மேலதிகதகவல்களை மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.05.04 முதல் 2023.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்குறிப்பிட்டவாறு கட்டணங்களைச் செலுத்தி அரனாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்விப் பிணைமுறிப் பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு சகல கேள்விதாரர்களும் மேற்படி வேலைக்கான கேள்விப் பிணை முறியை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அதன் தொழில்தருநர் செயலாளர், அரனாயக்க பிரதேச சபை என்று பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். இல்லையெனில் குறித்த கேள்விப் பிணைத் தொகை அக்கைத்தொழிலின் பெயரில் அரனாயக்க பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை அரனாயக்க பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ.பே. இல. 035-2258876 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுவோருக்கு இலவசமாக வாரத்தின் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசீலித்துப் பாக்கலாம்.

08. பொறியிடப்பட்ட கேள்விகளை 2023.05.31ம் திகதி முற்பகல் 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு செயலாளர் பிரதேச சபை, அரனாயக்க என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அரனாயக்க பிரதேச சபையின் செயலாளரின் அறைக்குள் வைக்கப்பட்டுள்ள பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு, பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த திட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

09. 2023.05.31 முற்பகல் 10.15 இற்கு அரனாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

10. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை அரனாயக்க பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**பிரதேச சபை**
**அரனாயக்க**

**2023.05.03ம் திகதி**

# அறிவித்தல்

**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் பெயர் பட்டியலில் காலமான அங்கத்தவர்களை அகற்றுவதுடன் சம்பந்தப்பட்ட அறிக்கை**

**2023.05.03 முதல் 2023.05.17 வரை**

**கீழ்க்காணும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அதுபற்றி**

**2023.05.17ம் திகதிக்கு முன்னர் தலைமையகத்திற்கு எழுத்து மூலம், தபாலில் அல்லது கையோடு ஒப்படைத்தல் வேண்டும். அத்தினத்தின் பின்னர் எந்த முறைப்பாடுகளும் ஏற்கப்பட மாட்டாது.**

**சங்கத்தின் முகவரி : செயலாளர், வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நாத்தாண்டிய**
**www.membercoop.net/coopnaththandiya.php, www.nattmpcs.com**
**தொலைபேசி இலக்கம் : 032-2254236**

| பி. இல | பிரதேசத்தின் பெயர் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 01 | நாத்தாண்டிய இல. 01 | உரக்களஞ்சியத்தில் உள்ளது |
| 02 | நாத்தாண்டிய இல. 02 | உரக்களஞ்சியத்தில் உள்ளது |
| 03 | நாத்தாண்டிய இல. 03 | உரக்களஞ்சியத்தில் உள்ளது |
| 04 | பிலகட்டுமுல்ல | தலைமையகத்தின் செயலாளரின் அறையில் உள்ளது |
| 05 | மானிங்கல | பிரதேச அலுவலகத்தில் உள்ளது |
| 06 | துன்கன்னாவ | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 07 | நாரவில | தலைமையகத்தின் செயலாளரின் அறையில் உள்ளது |
| 08 | யக்தெஸ்ஸாவ | தலைமையகத்தின் செயலாளரின் அறையில் உள்ளது |
| 09 | மீகஹவெல | தலைமையகத்தின் செயலாளரின் அறையில் உள்ளது |
| 10 | பஹறகொட்டார முல்ல | உரக்களஞ்சியத்தில் உள்ளது |
| 11 | தம்பொவ | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 12 | கம்மிககம | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 13 | சோமவத்த | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 14 | மாவில | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 15 | லங்சிகம | கிராமிய வங்கியில் உள்ளது (லங்சிகம) |
| 16 | இஹலகொட்டார முல்ல | கிராமிய வங்கியில் உள்ளது (இஹல கொட்டாரமுல்ல) |
| 17 | இஹல கட்டுநேரிய | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 18 | கொஸ்வத்த | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 19 | மொரகெலே | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 20 | பளுவெல்கால | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 21 | முதுகட்டுவ | பிரதேச அலுவலகத்தில் உள்ளது |
| 22 | மெதகட்டுநேரிய | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 23 | பஹல கட்டுநெரிய | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 24 | கட்டிராவ | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 29 | தெமட்டபிட்டிய | கிராமிய வங்கியில் உள்ளது (தெமட்டபிட்டிய) |

| பி. இல | பிரதேசத்தின் பெயர் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 30 | ஹெவன வத்துகஹமுல்ல | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 31 | மெதகொட | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 32 | மட்டாகொட்டுவ | மஹவெவ கோப்சிட்டியில் உள்ளது |
| 33 | குடாமடு | கோப் சிட்டியில் உள்ளது |
| 34 | தொடுவாவ | கிராமிய வங்கியில் உள்ளது (தொடுவாவ) |
| 35 | கொஸ்வாடிய | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 36 | முட்டிபெந்திவில | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 37 | மஹவெவ | கோப் சிட்டியில் உள்ளது |
| 38 | தல்வில | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 39 | ஹாலபன்வில | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 40 | பெர்ணாண்டோ வீதி 01 | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 42 | குடாவெவ | பிரதேச அலுவலகத்தில் உள்ளது |
| 43 | மாரவில சேர்ச் வீதி | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 44 | மாரவில புதுப்பித்தல் | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 45 | வலஹபிட்டிய | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 46 | பரஎல்பொல | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 47 | மரத | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 50 | கல்அமுன | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 51 | சாகரகம | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 52 | மோதரவெல்ல | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 53 | இரணவில | மினிகோப் சிட்டியில் உள்ளது |
| 54 | கடொல்கொடவத்த | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 55 | இத்தமல்கம | பிரதேச அலுவலகத்தில் உள்ளது |
| 56 | பனங்கொட | தலைமையகத்தின் செயலாளரின் பொறுப்பில் உள்ளது |
| 57 | பஹல வலகஹபிட்டிய | கோப் சிட்டியில் உள்ளது |

**செயலாளர்**
**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - குருநாகல்

மக்கள் வங்கி குருநாகல் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 19.05.2023 தேதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 20.05.2023 மற்றும் 21.05.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | குருநாகல் - 012 | குளியாப்பிட்டிய - 028 | வாரியப்பொல - 163 | இப்பாகமுவ - 207 |
|---|---|---|---|---|
| கிளைகள் | குருநாகல், மலியதேவ, எதுகல்புர, பொல்கஹவெல, அளவ்வ, பொத்துஹெர | குளியாப்பிட்டிய, நாரம்மல, ஹெட்டிபொல, கிரியுல்ல, மாகந்துர, பிங்கிரிய | வாரியப்பொல, நிகவரெட்டிய, மஹோ, கல்கமுவ, கோபேகனே | இப்பாகமுவ, பொல்பித்திகம, மெல்சிறிபுர, ரிதீகம. மாவத்தகம |
| சேவை மையங்கள் | மருத்துவமனைப்பிரிவு, M.C.பிரிவு, மலியதேவ, பிதுருவெல்ல, ஹிரிபிட்டிய, மல்லவபிட்டிய, கொடவெல, போயவலன, மாதவ | தும்மலசூரிய, உடுபத்தாவ, பிஹெல்பொல, கந்தனேகெதர, கட்டுப்பொத்த, பண்டாரகொஸ்வத்த, பம்மன்ன, தம்பதெனிய, பன்னல, வீரபொகுன | மஸ்பொத்த, நிகவெரட்டிய, ரஸ்நாயக்கபுர, கிரில்ல, நாகொலகம அம்பன்பொல, பொரலுவெவ | கும்புக்கடே, பனகமுவ, தொடம்கஸ்லந்த, பரகஹதெனிய |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் குருநாகல்**
**இல. 03, வத்ஹிமி வீதி**
**குருநாகல்**
**தொலைபேசி இல. 037-2222572, 037-2222453, 037-2224638**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

# மக்கள் வங்கி - கண்டி பிராந்திய தலைமைக் காரியாலயம்

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

கண்டி பிராந்தியத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 20.05.2023 மற்றும் 21.05.2023 | 27.05.2023 மற்றும் 28.05.2023 | 27.05.2023 மற்றும் 28.05.2023 | 20.05.2023 மற்றும் 21.05.2023 |
|---|---|---|---|---|
| இத் திகதி வரை மீட்கப்படாத/ புதுப் பிக்கப்படாத நகைகள் | 19.05.2023 | 26.05.2023 | 26.05.2023 | 19.05.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | கண்டி கிளை வளாகம் | கடுகஸ்தோட்டை கிளை வளாகம் | பேராதனை கிளை வளாகம் | தெல்தெனிய கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | கண்டி, கண்டி நகர மையம், செங்கடகல | கடுகஸ்தோட்டை, அகுறணை, மனிக்கின்ன, அங்கும்புர, பன்வில வத்தேகம, அலவத்துகொட, பூஜாபிட்டிய, கலகெதர. ஹதரலியத்த | பேராதனை, தவுலாகல, கடுகண்ணாவை, பிலிமத்தலாவை, கம்பளை, நாவலப்பிட்டி, புஸ்ஸல்லாவை தெல்தோட்ட, கெலிஓயா | தெல்தெனிய, ஹசலக |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | நீதிமன்ற வளாகம், வழக்கறிஞர் அலுவலகம், குண்டசாலை, மஹய்யாவா, பல்லேகல, மாரஸ்ஸன, தலாத்துஓயா | பொல்கொல்ல, ஹாதெனிய, திகன, மடவளை, அம்பதென்ன, பொக்காவல, ஹுலுகங்கை | முருதலாவ, பல்கலைக்கழகம், கிரிபத்கும்புர, கலஹ, வெலம்பொட, பொத்தபிட்டிய, பல்லேகம, கம்பளை நகரம், குருந்துவத்தை | மதமகநுவர, உடுதும்பர, கொலொங்கொட |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.17, தலதா வீதி, கண்டி.**
**தொலைபேசி இல. 081-2234283/081-2228383**

மக்கள் வங்கி PEOPLE'S BANK

# போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை**
**NTC/F&P/ETS/2023/152**

**பணியின் தலைப்பு : தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இலங்கையில் பொதுப் போக்குவரத்துக்கான இலத்திரனியல் பயணச்சீட்டு முறையினை நடைமுறைப்படுத்துதல்**

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் சார்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) இலங்கையில் பொதுப் போக்குவரத்து சேவைக்காக இலத்திரனியல் பயணச்சீட்டு முறையை (ETS) நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூர் சேவை வழங்குனர்களின் ஆர்வ வெளிபாட்டினை (EOI) கோருகின்றது.

இலங்கையில் பொதுப் போக்குவரத்து அமைப்பு மக்கள்தொகையில் கணிசமான பகுதியினருக்கு சேவை செய்கிறது, மேலும் மதிப்பிடப்பட்ட 60% இலங்கையர்கள் தங்கள் தினசரி பயணத்திற்கு பொது போக்குவரத்தை பயன்படுத்துகின்றனர். இருப்பினும், தற்போதைய டிக்கெட் முறை காலாவதியானது மற்றும் செயலற்ற முறையாவதுடன் பயணிகளுக்கு நீண்ட கால தாமதத்திற்கு வழிவகுக்கிறது, அத்துடன் போக்குவரத்து நடத்துநர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

**குறிக்கோள் :**

இந்த செயற்திட்டம் திறமையான, நம்பகமான மற்றும் பயனர் நட்பு ETS ஐ செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது ஒரு சிறந்த பயணிகள் அனுபவத்தை விளைவிக்கும் மற்றும் திறமையான ஒழுங்குமுறை சூழலில் போக்குவரத்து நடத்துனர் வருவாயை அதிகரிக்கும்.

**நடைமுறை அட்டவணை :**

கொள்முதல் ஒழுங்கினை உறுதிப்படுத்திய மூன்று மாதங்களுக்குள் திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இந்த ஆண்டில் முழுமையாக வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

**பணியின் நோக்கம் :**

சேவை வழங்குநர் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாவார்கள்:

1. இலங்கையின் பொதுப் போக்குவரத்து அமைப்புக்கு மிகவும் பொருத்தமான ETS ஐத் தீர்மானிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வை நடத்துதல்.
2. வன்பொருள், மென்பொருள் மற்றும் பிற தேவையான உள்கட்டமைப்பு உட்பட ETS ஐ உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
3. போக்குவரத்து சாரதிகள், நடத்துனர்கள், அதிகாரிகள் மற்றும் பயணிகளுக்கு ETS ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பயிற்சி அளித்தல்.
4. ETS க்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளை நடத்துதல்

**தேர்வுசெய்யும் முறை :**

சேவை வழங்குநருக்கு பின்வரும் தகுதிகள் இருக்க வேண்டும்.

1. இலங்கையில் பதிவு செய்யப்பட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. பொது அமைப்புகளுக்கான IT தீர்வுகளை செயல்படுத்துவதில் அனுபவம்.
3. தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் வளங்கள் ETS ஐ உருவாக்க மற்றும் செயல்படுத்த.
4. திட்டத்தை மேற்கொள்வதற்கான நிதி ஸ்திரத்தன்மை.
5. ஒத்த திட்டங்களை வழங்குவதில் நல்ல பெயர் மற்றும் சாதனை.

**EOI பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்:**

1. சேவை வழங்குநரின் சுருக்கமான அறிமுகம், அதன் பின்னணி மற்றும் பொது களங்களில் தீர்வுகளை செயல்படுத்துவதில் அனுபவம் உள்ளடங்கும்.
2. காலக்கெடு, வளங்கள் மற்றும் வழிமுறைகள் உட்பட ETS ஐ செயல்படுத்துவதற்கான விரிவான அணுகுமுறை
3. திட்டத்திற்கான முன்மொழியப்பட்ட நிதித் திட்டம்
4. முந்தைய வாடிக்கையாளர்களின் குறிப்புகளின் பட்டியல்

தேசிய போக்குவரத்து ஆணையம் EOI தேர்வு அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்க மிகவும் தகுதியான சேவை வழங்குநர்களை தேர்வு செய்யும்.

ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் முறையில் தேசிய **போக்குவரத்து ஆணைக்குழுவின் நிபந்தனைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் திருமதி ஷெரின் அத்துகோரல** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: +94 11 2081183, தொலைநகல்: +94 11 2503725 மின்னஞ்சல்: **sherinathukorala@gmail.com**

**ஆர்வத்தின் வெளிப்பாடுகளை சமர்ப்பித்தல்**

அனைத்து விபரங்களும் அடங்கிய ஆர்வ வெளிப்பாட்டு கோரிக்கை **2023.05.26** ஆம் திகதி **1500** மணிக்கு (i) நேரடியாக வழங்கப்பட வேண்டும். அல்லது (ii) தலைவர் - தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, 241, பூங்கா வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆர்வத்தின் வெளிப்பாட்டைக் கொண்ட உறையின் மேல் இடது பக்க மூலையில் **"தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இலங்கையில் பொதுப் போக்குவரத்துக்கான இலத்திரனியல் பயணச்சீட்டு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆர்வ வெளிப்பாடு"** எனக் குறிப்பிட வேண்டும்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
தொலைபேசி : +94 11 2503680 தொலைநகல் : 94 11 2503725
www.ntc.gov.lk

கடற்றொழில் அமைச்சு

# வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் முகத்துவாரம் படகு கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் தளம் தொடர்பான வணிகங்களில் தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் திட்ட முன்மொழிவுகளுக்கான ஆர்வ வெளிப்பாடு (EOI).**

**CFHC/SD/MUT-EOI/2023-01**

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முகத்துவாரம் படகு கட்டிடம் மற்றும் பழுதபார்க்கும் தளத்தில் அரச தனியார் பங்கு முதலீட்டை ஆரம்பிப்பதற்காக தேசிய / சர்வதேச முதலீட்டாளர்களின் ஆர்வ வெளிப்பாடு (EOI) கோரலுக்கான செயற்திட்ட முன்மொழிவு முதலீடுகள் பின்வரும் வகைகளில் மேற்கொள்ளப்படும்.

I. கப்பல் அமைத்தல் மற்றும் பழுதுபார்க்கும் தளம். (Ship Building & Repairing Yard)
II. கடல் எரிப்பொருள் களஞ்சிய சேவை. (Marine Bunkering Service)
III. அவசர கப்பல் பழுதுபார்க்கும் சேவை. (Emergency Ship Repairing Service)
IV. கடல் மற்றும் மீன்பிடித் தொழில் தொடர்பான பிற ஒத்து காணப்படும் புதிய கருத்துக்கள். (Other similar nature innovative concepts available related to maritime & fishery industry)

துறைமுகங்கங்கள் தொடர்பான முழு விபரங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், முன் தகுதி அளவுகோல்கள் மற்றும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய விபரங்களை **www.cfhc.gov.lk** இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிபிடப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுடன் கீழ்குறிப்பிடப்பட்ட விடயங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

01.Company Profile & Business Registration
02.Details of the existing similar type investments
03.Financial Capability (Audited Financial information for the past 03 years to be submitted.)

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் தொடர்புடைய முன்மொழிவுகளை **2023.06.05** ஆம் திகதி **பி.ப.03.00** மணிக்கு முன்னர் **கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல.15,** இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு பதிவு தபால் மூலமாகவோ, நேரடியாக கையளிக்கவோ அல்லது மின்னஞ்சல் மூலம் **(procurement@cfhc.gov.lk)** சமர்ப்பிக்கலாம்.

திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“முகத்துவாரம் படகு கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் தளம் தொடர்பான வணிகங்களில் தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் திட்ட முன்மொழிவுகளுக்கான ஆர்வ வெளிப்பாடு”** தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் திட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் உரிமையினை பெறுகைக்குழு கொண்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **முகாமையாளரிடம் (கொள்முதல்), தொலைப்பேசி இல : 011-2525063** பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.**

# கேள்வி அறிவித்தல்

## பேருவளை நகர சபை

பொதுச் சந்தை பாரி ஹாஜியார் புதிய கட்டிடத்தின் பீ 24/1/1 கடை அறையை பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் 2023-06-01ஆம் திகதி முதல் 2026-05-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவ விநியோகம் - 2023-05-04ஆம் திகதி முதல் 2023-05-18ஆம் திகதி வரை
கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2023-05-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் - 2023-05-19ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு

கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| இடம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரொக்கப் பணமாக (ரூபா சதம்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூபா சதம்) | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா சதம்) | மாதாந்த வாடகை (ரூபா சதம்) |
|---|---|---|---|---|
| பொதுச் சந்தை பாரி ஹாஜியார் புதிய கட்டிடம் | 5,000.00 | 25,000.00 | 207,900.00 | 3,300.00 |

- கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விப் படிவங்களை உரிய நேரத்திற்கு முன் நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் ‘‘செயலாளர், பேருவளை நகர சபை’’ எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வாசித்துப் பார்த்து படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவத்தின் மூலப் பிரதி, நகல் பிரதியென தெளிவாகக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கடை அறை கேள்வி 2023 எனக் குறிப்பிட்டு மீண்டும் உறையொன்றில் உள்ளிட்டு அனுப்புதல் வேண்டும்.
- இந்த அலுவலகத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விப் பிணைத் தொகை மீளளிக்கப்படும் என்பதுடன் ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்குக் குறைவாக கேள்வி கோரினால் கேள்வி வைப்புத் தொகை மீளளிக்கப்பட மாட்டாது. குறைந்தபட்ச கேள்வித் தொகையை ஒரு தடவையில் செலுத்துதல் வேண்டும்.
- 03 மாதத்திற்கான மாதாந்த கடை வாடகைத் தொகையை வைப்புத் தொகையாக நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
- 2022 பெப்ரவரி மாதம் முதல் இந்நாள் வரையில் உள்ள நிலுவைத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.
- சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**செயலாளர் மற்றும்**
**சபையின் கடமைகள் மற்றும் கருமங்களை செயற்படுத்தும்**
**அதிகாரம் வாய்ந்த அதிகாரி,**
**பேருவளை நகர சபை.**

**2023-05-02.**

## மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்கநகைகள் பொது ஏல விற்பனை

31.12.2021 வரை புத்தளம் பிராந்தியத்திலுள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் அடகு வைக்கப்பட்டு 19.05.2023 வரையில் மீட்கப்படாத தங்கநகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதி மற்றும் வளாகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஏலம் தொடங்கும்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை திகதி | 20.05.2023 & 21.05.2023 |
| ஏலவிற்பனை இடம் | மக்கள் வங்கி - வென்னப்புவ கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய, கல்பிட்டி, மாதம்பே, ஆனமடுவ, தங்கொடுவ, மஹாவெவ, மாரவில |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவைமையங்கள் | மதுரங்குளிய, சிலாபம்கடற்றொழில், ஆராச்சிக்கட்டுவ, உடப்புவ, போலவத்த. லுனுவில உல்ஹிட்டியாவ, கொட்டாரமுல்ல, வெலிபன்னகஹமுல்ல. நாரவில, நொரோச்சோலை, ஆண்டிகம, தொடுவாவ |

இந்த ஏலவிற்பனையை பொதுமக்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் மாற்ற, ரத்துசெய்ய, ஒன்றிணைக்க, அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமை அலுவலகம் (புத்தளம்)**
**தொலைபேசி எண்: 032-2253301**

PEOPLE'S BANK

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

### பகிரங்க ஏல விற்பனை

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல. 1072, மருதானை வீதி, பொறள்ளை** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **மே மாதம் 30, 2023 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

#### எமது தங்கக் கடன் நிலையங்கள்

| | |
|---|---|
| ■ பொறள்ளை | ■ ஹெட்டன் |
| ■ காலி | ■ கண்டி |
| ■ கம்பஹா | ■ பதுளை |
| ■ கடவத்தை | ■ மாவனெள்ள |
| ■ களுத்துறை | ■ சிலாபம் |
| ■ கொச்சிக்கடை | ■ குருநாகல |
| ■ கொட்டாஞ்சேனை | ■ அனுராதபுரம் |
| ■ கொட்டாவ | ■ சுன்னாகம் |
| ■ மாத்தறை | ■ தம்புள்ள |
| ■ நீர்கொழும்பு | ■ எம்பிலிபிட்டிய |
| ■ திஸ்ஸமஹாராம | ■ யாழ்ப்பாணம் |
| ■ இரத்தினபுரி | ■ மாத்தளை |
| ■ வெலிசர | ■ நுவரெலிய |
| ■ வத்தளை | ■ பொலன்னறுவை |

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

## பெறுகை அறிவித்தல்

### வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

### மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்குவதற்காக நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவு, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரப் பதிவைக் (கைத்தொழிலுக்கு இயைபாக) கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தால் இயைபுடைய கைத்தொழில் மற்றும் உங்களின் மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை 2023-05-09ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதிக்கு முன் prdatender@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது. பதிவை உறுதி செய்வதற்கு "CIDA" பதிவு அல்லது வியாபாரப் பதிவின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை வேண்டுகோள் கடிதத்துடன் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் 2023-05-30ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும் என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறாகும்.

1. உங்களால் விண்ணப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான தகவல்களை வேண்டுகோள் கடிதத்தில் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தகவல்கள் சரியாக இல்லாவிட்டால் அறிவிக்கப்படாமலேயே உங்களது வேண்டுகோள் கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலமான வேண்டுகோள் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளல் 2023-05-29ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் வேண்டுகோள் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள நிறுவனங்களுக்கு மட்டும் 2023-05-09ஆம் திகதி முதல் 2023-05-30ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப் படிவங்கள், கேள்விதாரரினால் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
3. 2023-05-19ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரியில் இடம்பெறும்.
4. இயைபுடைய கேள்விப் படிவங்களின் மென் பிரதியை உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் உங்களால் கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு வன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கேள்விப் படிவத்தின் மென் பிரதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல பக்கங்களும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்படிவத்தின் மூலப் பிரதியின் மற்றும் நகல் பிரதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வகையில் வேலைக்கு இயைபான தொடரிலக்கம் மற்றும் வேலையின் பெயரையும் மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா என்பதை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடவும். முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி எனும் முகவரிக்கு 2023-05-31ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கண்டி, இல. 109, யட்டிநுவர வீதி எனும் முகவரியிலுள்ள வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. தேவையான மேலதிக விபரங்களை கண்டி, போகம்பரை, இல. 09, எஹலெபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து 081-2052279, 081-2204378 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் prdatender@gmail.com எனும் மின்னஞ்சலின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் 2022ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட வினைத்திறன் ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு இயைபான சுற்றுநிருபங்களின் விதிமுறைகள் பெறுகை நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும்.

கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி, கண்டி.**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**பெறுகைகள் கோரல் (திறந்த) - 2023 இரண்டாம் கட்டம்**

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | வேலை / செயற்றிடம் | ICTAD பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | கேள்விப் பிணை முறி 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக (ரூபா) | கேள்விப் பிணை வங்கிப் பிணையாக (ரூபா) |
| ஏனைய செயற்றிட்டங்கள | | | | | | |
| கண்டி மாவட்டம் | | | | | | |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி | | | | | | |
| 1 | CPC/PRDA/MAIN/K/KAN/2023/01 | சிறுநீரக சிகிச்சைப் பிரிவிற்குப் பிரவேசிக்கும் ஹந்தான வீதியின் நடைபாதை திருத்தவேலைகள் (0+420 - 0+580 km) | C9-C8-C7 | 3.90 | 19,500.00 | 39,000.00 |
| 2 | CPC/PRDA/MAIN/K/KAN/2023/02 | வாரியபொல ஸ்ரீ சுமங்கள வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் (0+741km) | C9-C8 | 0.70 | 3,500.00 | 7,000.00 |
| நுவரெலியா மாவட்டம் | | | | | | |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட | | | | | | |
| 3 | CPC/PRDA/OTHER/N/RIK/2023/01 | ரிகில்லகஸ்கட ஆதார வைத்தியசாலை உள்ளக பிரவேச வீதிக்கான அபிவிருத்திக்கு பொருட்கள் வழங்குதல் | C9-C8 | 0.91 | 5,000.00 | 10,000.00 |
| 4 | CPC/PRDA/OTHER/N/RIK/2023/02 | ரிகில்லகஸ்கட ஆதார வைத்தியசாலை உள்ளக பிரவேச வீதிக்கான அபிவிருத்திக்கு அஸ்பால்ட் வழங்குதல் | C8-C7-C6 | 9.35 | 47,000.00 | 94,000.00 |
| 5 | CPC/PRDA/OTHER/N/RIK/2023/03 | ரிகில்லகஸ்கட ஆதார வைத்தியசாலை உள்ளக பிரவேச வீதிக்கான அபிவிருத்திக்கு எமல்ஷன் வழங்குதல் (CSS-1 & CRS-1) | எமல்ஷன் உற்பத்தி மற்றும் வழங்கல் பதிவு | 0.72 | 4,000.00 | 8,000.00 |
| ஏனைய செயற்றிட்டங்கள் | | | | | | |
| செயற்றிட்டப் பொறியியலாளர் அலுவலகம் - அம்பதென்ன | | | | | | |
| 6 | CPC/PRDA/AMB.BUILD/2023/02 | அம்பதென்னையிலுள்ள வர்த்தகக் கட்டிடத்திற்கு மின்சார முறைமைகள் மற்றும் மின்னல் பாதுகாப்பு முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | வியாபாரப் பதிவு | 21.38 | 107,000.00 | 214,000.00 |
| 7 | CPC/PRDA/AMB.BUILD/2023/03 | அம்பதென்னையிலுள்ள வர்த்தகக் கட்டிடத்திற்கு CCTV முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | வியாபாரப் பதிவு | 2.96 | 15,000.00 | 30,000.00 |
| 8 | CPC/PRDA/AMB.BUILD/2023/04 | அம்பதென்னையிலுள்ள வர்த்தகக் கட்டிடத்திற்கு தீப்பாதுகாப்பு மற்றும் தீயைக் கண்டுபிடிக்கும் முறைமையை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | வியாபாரப் பதிவு | 5.79 | 29,000.00 | 58,000.00 |
| 9 | CPC/PRDA/AMB.BUILD/2023/05 | அம்பதென்னையிலுள்ள வர்த்தகக் கட்டிடத்திற்கு குழாய்கள் மற்றும் வடிகாலமைப்பு வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | வியாபாரப் பதிவு | 14.89 | 74,500.00 | 149,000.00 |

## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 02/05/12/19 | ஜுன் 2023 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 06/13/20/26 | ஜுன் 2023 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 419, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 07/14/21/27 | ஜுன் 2023 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 14, புதிய நகரம், திகன |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 89, லோவர் வீதி, பதுளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 530, அளுத் மாவத்தை சாலை, கொழும்பு 15. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 08/15/22/28 | ஜுன் 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 08/15/22/28 | ஜுன் 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/15/22/28 | ஜுன் 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 252B, மற்றும் 252/1, கண்டி வீதி திருகோணமலை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி கிரண். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி வவுணதீவு |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி, மல்லாவி |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 09/16/23/30 | ஜுன் 2023 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 09/16/23/30 | ஜுன் 2023 | 575, K.K.S வீதி, தெல்லிப்பனை கிழக்கு, தெல்லிப்பளை |
| 09/16/23/30 | ஜுன் 2023 | எண்.12, வார்டு எண்.06, பிரதான வீதி, பேசாலை, மன்னார் |
| 09/16/23/30 | ஜுன் 2023 | பிரதான வீதி மருதங்கேணி |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE

உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP GF-2144 Toyota Starlet, 1998, car அதியுயர் விலை க்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொ ழும்பு 03. தொலைபேசி 07145429 5 8. 026563

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP AAA-0583 Bajaj, 2012, threewheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, கா லி வீதி, கொ ழும்பு 03 . தொலைபேசி 07 112108 1 0. 026560


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk


## நீதிச்சேவை ஆணைக்குழு

# இலங்கை நீதிச்சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

### இலங்கை நீதிச்சேவையின் IIஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்குரிய (நீதவான் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.)

01. உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 05.06.2023 திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரியின் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட்ட ரூபா.110 பெறுமதியுடைய முத்திரையிடப்பட்ட தபால் உறை (பதிவுத்தபாலில் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்காக) ஒன்றினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

02. சம்பள அளவுத்திட்டம் : ரூ. 75,000 - 10 x 1630 - 91,300 (இச்சம்பள அளவானது முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2018 அமைவாக.) சம்பளத்திற்கு மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. சகல விண்ணப்பதாரிகளும்
   - (அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
   - (ஆ) நன்நடத்தையும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
   - (இ) இலங்கையின் அனைத்து பாகங்களிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. தகைமைகள்
   - (அ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக தொழில் நியாயசபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது
   - (ஆ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக நான்கு வருடங்களுக்கு குறையாமல் வினைத்திறன் மிக்கவாறு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது
   - (இ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரசகூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது
   - (ஈ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நான்கு வருடங்களுக்கு குறையாத" சேவைக் காலம்/செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மை காலத்தை கணக்கிடும்போது, மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிப்பிடப்படும் சேவைக் காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மைக் காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரிகள் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

குறிப்பு :

01. விண்ணப்பபடிவக் கட்டணமான 7,500/= ரூபாவினை மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டு வரும் **297100199025039** என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு " எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக் கொண்ட வைப்புச் சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச்சீட்டினை நிரப்பும் போது வைப்புச் சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

02. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் போன்றவற்றை பதிவுத்தபாலினூடாகவோ அல்லது அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ மேற்கொள்ளமுடியும்.

03. அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பபடிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்களை பெற்றுக் கொள்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான முகவரி :

**செயலாளர்,**
**நீதிச்சேவை ஆணைக்குழு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**கொழும்பு 12.**

**எச். எஸ். சோமரத்ன**
**செயலாளர்**
**நீதிச்சேவை ஆணைக்குழு**

**2023 மே மாதம் 04 ஆம் திகதி,**
**கொழும்பு 12,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தில்.**


The Housewives' companion
Classifieds on
Daily News


Uva Wellassa University

## தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பதில் பெருமிதம் கொள்வோம்

### விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் கோரல்

# உபவேந்தர் பதவி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பேரவையானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் படியும், அதனைத் தொடர்ந்த திருத்தங்களின்படியும், பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பதவிக்காக பொருத்தமான விண்ணப்பங்களை அல்லது முன்மொழிவுகளை கோருகின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் விதிகளின் படி, உப வேந்தரானவர் பல்கலைக்கழகத்தின் முழு நேர அதிகாரி ஆவார். அவர் முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அதிகாரி. பேரவை மற்றும் மூதவை ஆகிய இரண்டிற்கும் அவர் ஒரு பதவிவழி உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் இருப்பார்.

உப வேந்தர் பதவியிலிருந்து தாமாக விலகினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்தின்படி பதவியில் இருந்து நீக்கப்பட்டாலன்றி, மூன்று ஆண்டுகள் அல்லது அவர் தனது அறுபத்தைந்தாவது (65) வருடத்தை நிறைவு செய்யும் வரை பதவியில் இருப்பார். இவற்றில் முதல் நிகழ்வுவரை பதவி வகிக்கலாம்.

உப வேந்தரானவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குதல், முறைப்படுத்தல், நடத்திச்செல்லல் என்பவற்றோடு நிர்வாகக் கொள்கைகளை உருவாக்குதல், நடத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகப் பேரவையின் தீர்மானங்களை அமுல்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாவார். எனவே, கல்விசார் சிறப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக மேலாண்மை மற்றும் திறன்மிகு பாகுபாடற்ற தலைமைத்துவம் ஆகியவற்றின் நியமங்களை நிலைநிறுத்துபவராக இருத்தல்வேண்டும்.

வெற்றிகரமான வேட்பாளர் அதி கூடிய கல்வித் தகைமையையும் வலுவான ஆராய்ச்சி பின்புலத்தையும், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் மற்றும் பல்வேறு விதமான வெளியாள்களுடன் சிறப்பான ஆளிடை தொடர்புகளை கொள்வதற்கான தனிப்பட்ட திறன்கள், கொள்கை சிக்கல்கள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளை திறம்பட செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட திறன்களை கொண்டிருக்கவேண்டும். சமூகத்திற்கான அர்ப்பணிப்பு உட்பட ஒரு பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் பணி பற்றிய ஆழமான புரிதலை அவர் கொண்டிருக்க வேண்டும். (விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள்/ பரிந்துரைக்க விரும்புவோர் மேலதிக விவரங்களுக்கு பல்கலைக்கழக இணையத்தளமான http://www.uwu.ac.lk ஐப் பார்வையிட வேண்டப்படுகிறார்கள்).

உப வேந்தரானவர் அதி கூடிய கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் இருப்பதற்கு தகுதியுடையவராவார். மேலும் அவரது சம்பளத்தில் 15% உபசரிப்பு கொடுப்பனவாகவும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் தகுதியுடையவர்.

**பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்கள்/முன்மொழிவுகளுடன் இணைக்கப்பட வேண்டும்.**

1. விண்ணப்பதாரரின்/முன்மொழியப்பட்டவரின் முழுமையான சுயவிபர அறிக்கை (Curriculum Vitae). பிறந்த திகதி கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும்.
2. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கான தனிப்பட்ட தொலைநோக்கு அறிக்கை மற்றும் துணைவேந்தர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டால் விண்ணப்பதாரர் / பரிந்துரைக்கப்பட்டவர் என்ன சாதிக்க முன்வருகிறார் என்பது பற்றிய சுருக்கமான அறிக்கை.
3. முன்மொழியப்பட்டிருந்தால் முன்மொழியப்பட்டவரின் ஒப்புதல் கடிதம்.
4. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பொதுச் சேவை, கூட்டுத்தாபனங்கள், சட்டப்பூர்வ நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்/ முன்மொழியப்பட்டவர் இப் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில், அவர் இப் பதவிக்காக விடுவிக்கப்பட முடியுமா என்பதைக் குறிக்கும் திணைக்கள தலைவரின் கடிதம்.

விண்ணப்பங்கள் அல்லது முன்மொழிவுகள் பதிவாளர்/ பேரவை செயலாளர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 31 மே 2023 பிற்பகல் 3.30 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். இந்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் நகல் PDF வடிவில் வேறு ஏதேனும் துணை ஆவணங்களுடன் registrar@uwu.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு குறிப்பிட்ட நேரத்தின் முன் அனுப்பப்படல் வேண்டும். உப வேந்தர் பதவிக்கான நியமனம் பற்றிய மேலதிக விவரங்களுக்கு 10 ஏப்ரல் 2023 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 இலக்க சுற்றறிக்கையை பார்க்கவும்.

விண்ணப்பத்தின் இறுதித் திகதிக்குப் பின்னரான இரண்டு மாதங்களுக்குள் ஒரு வேலை நாளில் ஒரு விசேட பேரவை கூட்டம் நடத்தப்படும் மற்றும் அனைத்து வேட்பாளர்களும் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வுக்காக பேரவை கூட்டத்திற்கு நேரில் அழைக்கப்படுவார்கள். அனைத்து வேட்பாளர்களும் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேலாகாது சுருக்கமான விளக்கக்காட்சியை (Presentation) வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 இலக்க சுற்றறிக்கை இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையின்படி, விண்ணப்பதாரர்கள் / பரிந்துரைக்கப்பட்டவர்களில் இருந்து தகுதியான மூன்று வேட்பாளர்கள் பேரவையினால் தரவரிசை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு, நியமனத்திற்கான பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பம் / முன்மொழிவு மற்றும் ஏனைய ஆவணங்கள் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் "துணைவேந்தரின் அலுவலகம்" எனக் குறிக்கப்பட வேண்டும்.

**எம். எப். ஹிபத்துல் கரீம்**
**பதிவாளர் / பேரவை செயலாளர்**
**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.**

**30 ஏப்ரல் 2023**

# பெறுகை அறிவித்தல்

### இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் (கைத்தொழில்கள் அமைச்சு)

## ஆய்வுகூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகை

**இல.: SLITA/MEL/01/2023**

1. ஆய்வுகூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2023 மே 03 ஆம் திகதியிலிருந்து 2023 மே 17 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவன இயக்கத்திற்கான பதில் கடமையாற்றும் பணிப்பாளரிடமிருந்து (செயற்பாடுகள்) பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
4. www.slita.lk என்ற எமது இணையதளத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். (வன் பிரதிகள் வழங்கப்பட மாட்டாது).
5. 2023 மே 03 ஆம் திகதியிலிருந்து 2023 மே 18 ஆம் திகதி வரையும் விடுமுறைகள் நீங்கலாக வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கணக்கிடல் பிரிவில் ரொக்கப் பணத்தில் கீழே வழங்கப்பட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை பணக்கொடுப்பனவாக செலுத்தலாம் அல்லது இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கியின் இரத்மலான கிளையிலுள்ள 9521019 என்ற வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்படலாம் (குறிப்பு: வங்கியின் ரொக்கப்பண வைப்புத் துண்டில் வரவு வைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதற்கான நோக்கம் ஆகியன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்)

| உபகரணத்தின் விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|
| Colour Fastness to Light Tester | 4,000 | 300,000 |
| Washing Machine | 2,500 | 100,000 |
| Colour Fastness to Light Tester & Washing Machine | 6,500 | 400,000 |

6. விலைமனுக்கள் 2023 மே 18 திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 மே 18 ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்,**
**கந்தவள தோட்டம் இல.: 02,**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி, இரத்மலான.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 0112636337**
**இணையதளம்: www.slita.lk**

## சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் - மேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கல்

1. கொழும்பு-10, மாளிகாவத்த செயலக கட்டிட சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் அம்சங்களுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார் என்பதுடன் விலைமனுக்கள் 2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும்.

| Bid Ref No. | Name of the Bid | Non-refundable Bid Fee (Rs) | Pre Bid Date & Time |
|---|---|---|---|
| WP/PD/PRO/02/04 Endoscopy/2023 | Procurement of video Endoscopy System in BH Homagama | 12,000.00 | 11/05/2023 (10.30 a.m – 11.00 a.m) |
| WP/PD/PRO/02/05/Ent Microscope/2023 | Procurement of ENT Microscope in BH Homagama | 7,500.00 | 11/05/2023 (11.00 a.m – 11.30 a.m) |

2. 2023.05.04 ஆம் திகதியிலிருந்து 2023.05.24 ஆம் திகதி வரையும் சுசேமாப இன் அலுவலகத்தில் வழமையான வேலை நாட்களில் கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. 2023.05.25 ஆம் திகதியன்று அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மூடும் நேரத்தின் பின்னர், உடனடியாகவே கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, மேல் மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
4. உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/ தரஅங்கீகாரம் பெற்ற முகவருக்கு மாத்திரமே விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். இந்தக் கூற்றிற்கு சான்றுபகரும் ஆவணங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை தேவைப்படுத்தும் வேளையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரத்திற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் தன்மையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, மேல் மாகாண, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
6. விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக முத்திரையிடப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் அடக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தொடர்பிலக்கம் எழுதப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களுக்கு, மேல் மாகாண சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்பிலக்கம்: 011-2437154, 011-2437155.

**மருத்துவ கலாநிதி தம்மிக்க ஜயலத்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**மேல் மாகாண சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர்,**
**மாளிகாவத்த.**


Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383   0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# ஆப்கான் ஒருநாள் தொடரில் ஹசரங்கவின் இடத்திற்கு ஹேமன்தவை அழைக்க வாய்ப்பு

இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க சோபிக்காத நிலையில் எதிர்வரும் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அவரது இடத்திற்கு துஷான் ஹேமன்தவை பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

லெக்பிரேக் பந்துவீச்சாளரான ஹேமன்த அயர்லாந்துக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் இணைக்கப்பட்டபோதும் போட்டியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்நிலையில் அவரை ஆப்கானுடனான ஒருநாள் தொடருக்கு அழைக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடவுள்ளது. இலங்கை அணி உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் ஆடுவதற்காக சிம்பாப்வே செல்வதற்கு முன்னர் ஜூன் 2, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது.

ஆப்கானுடனான ஒருநாள் தொடருக்கு அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் குசல் ஜனித் பெரேராவை தயார்படுத்தும்படி உயர் திறன் நிலைய அதிகாரிகளுக்கு தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஒருநாள் அணி தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வருவது, இளம் வீரர்கள் எதிர்பார்த்த அளவு சோபிக்காததன் காரணமாகவே மத்தியூஸை மீண்டும் ஒருநாள் அணிக்கு அழைப்பதற்கு தேர்வுக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரியவருகிறது. மத்தியூஸ் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் ஆடிய இரு ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றபோதும் சோபிக்கத் தவறினார்.





தோள்பட்டை காயம் காரணமாக குசல் பெரேரா கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஒருநாள் போட்டிகளில் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சி டி20 பந்துவீச்சாளர் தரவரிசையில் நான்காவது இடத்தில் இருந்தபோதும் வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் சோபிக்கத் தவறி வருகிறார். அண்மையில் நடைபெற்ற நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் ஆடிய இரு ஒருநாள் போட்டிகளிலும் ஹசரங்க ஒரு விக்கெட்டைக் கூட வீழ்த்தவில்லை.

28 வயதான துஷான் ஹேமன்த இதுவரை இலங்கை அணிக்காக ஆடாத நிலையில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இங்கிலாந்து லயன்ஸ் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தில் இலங்கை ஏ அணிக்காக சிறப்பாக செயற்பட்டார்.

இதன்போது அவர் இலங்கை ஏ அணிக்காக மூன்று ஒருநாள் போட்டிகளிலும் மொத்தம் 11 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று அண்மையில் நடைபெற்ற தேசிய சுப்பர் லீக் தொடரில் 8 போட்டிகளில் ஆடிய ஹேமன்த 13 விக்கெட்டுகளை வீழ்த்தி தொடரில் மூன்றாவது அதிகூடிய விக்கெட்டுகளை வீழ்த்தியவராக பதிவானார்.

## ஐ.சி.சி பிரதிநிதிகள் இலங்கை வருகை

இலங்கை கிரிக்கெட் மீதான அரசியல் தலையீடு தொடர்பில் கண்டறிவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் (ஐ.சி.சி) பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கை வரவிருப்பதாக கிரிக்கெட் வட்டாரம் மூலம் தெரியவருகிறது.

இந்த பிரதிநிதிகள் குழு வரும் 9 ஆம் திகதி இலங்கை வரவிருப்பதோடு அவர்கள் இலங்கை பயணத்தில் இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள், விளையாட்டு அமைச்சர் மற்றும் விளையாட்டு அமைச்சின் அதிகாரிகளை சந்திக்கவுள்ளனர்.

## முல்லைத்தீவு 3ஆம் இடம்



யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகண ரீதியிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணி 3ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது. 3ஆம் இடத்தை தெரிவுசெய்வதற்கான போட்டியில் மன்னார் மாவட்ட அணியை 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு இவ் இடத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சேரன் இல்லம் முதலிடம்



பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் சேரன் இல்லம் 526 புள்ளிகளுடன் முதலிடத்தை பெற்றது.

ஏழு வருடங்களின் பின்னர் அதிபர் கே. சத்தியநாதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (02) பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 483 புள்ளிகளைப் பெற்று பாண்டியன் இல்லம் இரண்டாம் இடத்தையும், 422 புள்ளிகளைப் பெற்று சோழன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந் நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதரன் பிரதம அதிதியாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு. திருச்செல்வம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

## இங்கிலாந்துடனான இலங்கை போட்டி அட்டவணை மாற்றம்




இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஆடுவது உறுதியான நிலையில், இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் கோரிக்கையை அடுத்து போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவரப்பட்டதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டி சீனாவின் ஹொங்சூவில் எதிர்வரும் செப்டெம்பர் 23 தொடக்கம் ஒக்டோபர் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை மற்றும் இங்கிலாந்து மகளிர் அணிகள் எதிர்வரும் செப்டெம்பர் 2–9 இல் மூன்று டி20 மற்றும் தொடர்ந்து செப்டெம்பர் 14–19 இல் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவிருந்தது. இந்நிலையில் இந்தத் தொடர் தற்போது ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்கூட்டியே ஆரம்பிக்கப்படவுள்ளது. மூன்று டி20 போட்டிகளை அடுத்து ஒருநாள் தொடர் செப்டெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## மெஸ்ஸி இடைநிறுத்தம்




ஆர்ஜன்டீன நட்சத்திர கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி தனது பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்தின் அனுமதி இன்றி சவூதி அரேபியா பயணித்ததற்காக அந்தக் கழகத்தினால் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார். அந்த பிரான்ஸ் கழகம் தனது சொந்த மைதானத்தில் லோரியன்ட் அணியிடம் தோற்றதை அடுத்தே மெஸ்ஸி சவூதி பயணத்தை மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் இடைநிறுத்தப்பட்ட காலத்தில் அவரால் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்கு பயிற்சி பெறவோ அல்லது ஆடவோ முடியாது.

வணிக வேலை ஒன்றுக்காக சவூதி செல்ல தனது கழகத்திடம் மெஸ்ஸி அனுமதி கோரியபோதும் அது மறுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. கழகத்தினால் அபராதத்திற்கும் முகம் கொடுத்திருக்கும் மெஸ்ஸி, சவூதியின் சுற்றுலா தூதுவராகவும் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணத்தை வென்ற 35 வயது மெஸ்ஸி பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்கு இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தம் செய்துகொண்ட நிலையில் இந்தக் கோடை காலத்தில் அது முடிவுக்கு வரவுள்ளது.

## இலங்கை–பங்களாதேஷ் மகளிர் போட்டி அட்டவணையில் மாற்றம்



தொடரும் மோசமான காலநிலை காரணமாக இலங்கை மற்றும் பங்களாதேஷ் மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை (2) மழையால் கைவிடப்பட்ட இரண்டாவது ஒருநாள் போட்டியை எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்று (4) நடத்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. முன்னதாக ஒருநாள் போட்டிகள் பீ. சரா ஓவல் மைதானத்தில் நடத்தவே அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் எஞ்சிய இரண்டு ஒருநாள் போட்டிகளும் எஸ்.எஸ்.சி மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மூன்றாவது ஒருநாள் போட்டி வரும் மே 7 ஆம் திகதி நடைபெறும். இதனால் இலங்கை கிரிக்கெட் சபை மகளிர் பதினொருவர் அணியுடன் அன்றைய தினம் நடத்த திட்டமிடப்பட்ட பயிற்சிப் போட்டி கைவிடப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் பங்களாதேஷ் மகளிர் அணிகளுக்கு இடையிலான மூன்று டி20 போட்டிகளும் மே 9, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

## ரொஹிங்கியர் மியன்மார் திரும்ப நாளை சந்திப்பு



பங்களாதேஷில் அகதியாக உள்ள நாடற்ற ரொஹிங்கிய சிறுபான்மையினர் நாடு திரும்பும் ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்கும் முயற்சியாக ரொஹிங்கிய தூதுக் குழு ஒன்று நாளை (05) மியன்மார் பயணிக்கவுள்ளது.

2017 இல் இடம்பெற்ற மியன்மார் இராணுவ நடவடிக்கையால் தப்பிச் சென்ற சுமார் ஒரு மில்லியன் ரொஹிங்கிய அகதிகள் பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ளனர். இது தொடர்பில் ஐ.நா இனப்படுகொலை விசாரணையை முன்னெடுத்து வருகிறது.

ஓர் ஆண்டுக்குப் பின்னர் இந்த அகதிகள் நாடு திரும்ப மியன்மார் மற்றும் பங்களாதேஷ் இடையே ஒப்பந்தம் எட்டப்பட்டது. எனினும் இதில் இதுவரை சிறு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த அகதிகள் நாடு திரும்புவதற்கான நிலைமை சரியாக இல்லை என்று ஐ.நா எச்சரித்துள்ளது.

ஒரு முன்னோடித் திட்டமாக 1,000க்கும் அதிகமான ரொஹிங்கியர்களை மீளக் குடியமர்த்த மியன்மார் இராணுவ அரசு திட்டமிட்டிருக்கும் நிலையில் பங்களாதேஷ் எல்லைக்கு அருகில் இருக்கும் தளம் ஒன்றுக்கே தூதுக்குழுவினர் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

“ரொஹிங்கியர்களுக்காக மியன்மார் அரசு கட்டியிருக்கும் முகாம்கள் எமக்கு காண்பிக்கப்படவுள்ளது. அங்கு உள்ள வசதிகளை நாம் பார்வையிடவுள்ளோம்” என்று தூதுக்குழு உறுப்பினரும் ரொஹிங்கிய சமூகத் தலைவர் ஒருவருமான பதியுல் என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ரொஹிங்கிய அகதிகள் கடந்த ஆறு ஆண்டுகளாக சன நெரிசல் மிக்க, மோசமான முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். ரொஹிங்கியர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்தபோதும் அவர்கள் பங்களாதேஷில் இருந்து ஊடுருவியவர்கள் என்றே மியன்மாரில் பரவலாக பார்க்கப்படுகிறது.

# சர்வதேச செய்திகள்

## சூடானில் மற்றொரு போர் நிறுத்தத்திற்கு இணக்கம்

சூடானில் போர் நிறுத்தங்கள் அடுத்தடுத்து மீறப்பட்டதை பிராந்திய நாடுகளின் தூதுவர்கள் கண்டித்திருக்கும் நிலையில், அந்நாட்டில் ஏழு நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு போர் புரியும் தரப்புகள் இடையே இணக்கம் எட்டப்பட்டிருப்பதாக அண்டை நாடான தென் சூடான் அரசு அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவின் மூன்றாவது மிகப்பெரிய நாடான சூடானில் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடித்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் இராஜதந்திர முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் போரின் மனிதாபிமான பேரழிவு ஒன்று பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 430,000க்கும் அதிகமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மே 4 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை ஏழு நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு சூடான் இராணுவத் தளபதி அப்தல் பத்தா அல் புர்ஹான் மற்றும் போட்டியாளரான துணை இராணுவப் படை தலைவர் முஹமது ஹம்தான் டக்லஸ் இடையே கொள்கை ரீதியில் இணக்கம் எட்டப்பட்டது என்று தென் சூடான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.




கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி மோதல் வெடித்தது தொடக்கம் பல தடவைகள் போர் நிறுத்தங்கள் எட்டப்பட்டபோதும் தொடர்ச்சியாக வன்முறை வெடித்தது. தலைநகர் கார்டூமில் வான் தாக்குதல்கள் மற்றும் விமான எதிர்ப்பு தாக்குதல்கள் பற்றி அங்கிருப்போர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் கடந்த செவ்வாயன்று (02) இடம்பெற்ற மாநாட்டில் தொடரும் வன்முறைகள் பற்றி கடும் விமர்சனம் எழுந்தன. போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஆபிரிக்கா, அரபு மற்றும் ஐ.நா தவிர மற்ற நாடுகளின் பிரதிநிதிகளும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். “போர் நிறுத்தத்தை நீடிப்பது மற்றும் மதிப்பது, தொடர்ந்து மனிதாபிமான உதவிகளை உறுதி செய்வதற்கே நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்” என்று ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழு தலைவர் மூசா பாக்கி மஹமத் இந்த மாநாட்டில் தெரிவித்தார்.

இந்நிலையில் தென் சூடான் ஜனாதிபதி சல்வா கியிர் போர் தரப்புகளுடன் தொலைபேசியில் நடத்தி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே ஒருவார போர் நிறுத்தத்திற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

## தொழில்வாய்ப்பை அதிகரிக்கும் சீனா



இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரித்து வருவதால் அவர்களது நலன்களை முன்னிலைப்படுத்தி தொழில்வாய்ப்புக்களை அதிகரிப்பதில் சீனா விசேட கவனம் செலுத்தியுள்ளது. இதனடிப்படையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்த விரிவான வேலைத்திட்டத்தையும் சீனாவின் அமைச்சரவை வெளியிட்டுள்ளது.

16–24 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியிலான நகர்ப்புற வேலையின்மை சீனாவில் 19.6 வீதமாகக் காணப்படுகின்ற போதிலும் அது மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இவ்வருடம் சுமார் 11.58 மில்லியன் சீன மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் பட்டம் பெற்று வெளியேற உள்ளனர். இது இளைஞர்கள் மத்தியிலான வேலையின்மை விகிதத்தை மேலும் அதிகரிக்க வழிவகுக்குமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் விளைவாகத் தனியார்த்துறை நிறுவனங்களின் வேலைவாய்ப்புக்களில் நம்பிக்கை இழந்துள்ள இளைஞர்கள் குறைந்த சம்பளம் என்றாலும் அரச தொழில் வாய்ப்புக்களில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவித்துள்ள சீன அதிகாரிகள், 2022 இல் 7,60,000 பட்டதாரிகள் அரசாங்க நிறுவனங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.